தெணியான்

தெணியான்

# அறிவலை
# ARIVALAI

ஜனவரி — பெப்ருவரி

1978

விலை ரூபா 1/50

உள்ளே......

★ தேசிய வருமானமும் கணிப்பீட்டு முறைகளும்

★ நிலநெய்யின் உலகளாவிய நெருக்கடியும் அதில் இலங்கையின் பங்கும்.

★ கவிதை இலக்கியத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

★ இந்துப்பண்பாட்டு வரலாற்றில் இதிஹாசங்களும் புராணங்களும்

★ இலங்கை அமைச்சரவை அமைப்பு முறையின் தனிப்பண்புகள்

பல்கலைக்கழக மாணவர் வெளியீடு

## சமூக அறிவியல் ஏடு

Space donated by

Photographers

Prince Studio

Chunnakam.

Pro. M. NADARAJAH

Space donated by

Rolex

உங்கள் தேவை என்ன?

ஒலி அமைப்பதில்

ஒளி அமைப்பதில்

புகைப்படம் பிடிப்பதில்

பலவருட காலமாகக்

புகழ் பெற்றவர்கள்

றோலெக்ஸ்

அளவெட்டி, பண்டத்தரிப்பு.

Props:-

V. T. Sarvaswaran

S. Nadarajah

Regd. No. 6699

தெணியான்

# அறிவலை

ஜன - செப்

கடல்: 1 ஒரு சமூக அறிவியல் ஏடு அலை: 1

அறிவியல் வட்ட
நிர்வாகக் குழு

*T.* அன்பானந்தன்
(பேரா - வளாகம்)

*K.* ஜயந்தகுமாரன்
(பேரா - வளாகம்)

*M.* நாகேந்திரம்
(கொழு - வளாகம்)

*S.* குலசேகரம்
(பேரா - வளாகம்)

*L.* ஓங்காரமூர்த்தி
(வெளிவாரி மாணவர்)

*K.* பஞ்சாட்சரம்
(பேரா - வளாகம்)

*N.* இராதாக்கிருஷ்ணன்
(பேரா - வளாகம்)

*A.* இராஜரட்ணம்
(வித்தியோ - வளாகம்)

*R.* தம்பையா
(யாழ். வளாகம்)

சஞ்சிகை ஆசிரியர்

க. அன்பானந்தன்

நிர்வாக ஆசிரியர் :

நா. இராதாகிருஷ்ணன்

தொடர்பு முகவரி:

46, ஜேம்ஸ் பீரிஸ் மண்டபம்
இலங்கைப் பல்கலைக் கழகம்
பேராதனை வளாகம்.

*46, J. P. Hall,*
*University of Sri Lanka,*
*Peradeniya Campus.*

## நுழையுமுன்......

பலநாடுகளிலும், பலவிதமான இயற்கையலைகளும் அரசியலலைகளும் வீசுவதாகக் கேள்வி. வீசி அடங்கிப்போகும் அந்தமாதிரியான அலைகளை விட நின்று நிதானமாகத் தொடர்ந்து வீசவேண்டிய அறிவலை எம் நாட்டில் விருத்தியடைய வேண்டியதொன்றே. அந்த அலையின் நிதானத்தைக் குலைக்காமல், வேகத்தை அதிகரிக்க வேண்டிய அவசியத்தின் ஒரு பங்களிப்பே எமது இம்முயற்சியாகலாம்.

எமது இச்சஞ்சிகை பெரும்பாலும் மாணவர்களை மனத்திற்கொண்டே ஆரம்பிக்கப்படுகின்றது. இன்று எமது நாட்டில் தமிழ் மாணவர்களுக்காகத் தனிப்பட்ட ரீதியில் புதிய, புதிய தரவுகள், தகவல்களைத் தரும் சஞ்சிகைகள் குறைவாகவே இருப்பதுடன் நூலக வசதிகளும் நிறைவற்றனவாகவே உள்ளன. இச்சந்தர்ப்பத்தில் - இதை ஈடுசெய்யும் வகையில், கலை - வர்த்தகம் சார்ந்த மாணவர்களுக்குத் தேவையான அறிவியல் விடயதானங்களைப் புதியமுறையில் பூரணத்துவமாக அளிப்பது எமது பிரதான நோக்கமாக அமைகின்றது.

பொருளாதார வலு மிகக் குறைந்தவர்களான - மாணவர்களான நாம் ஒன்றுகூடி 'அறிவலை வட்டம்' என்ற ஓர் இயக்கத்தை ஸ்தாபித்து, அதன் அங்கத்துவப் பணத்தையே முதலீடாக்கி இச்சஞ்சிகையை வெளியிடுகின்ற போதும், இதை நாம் விற்பனை செய்வதும் பெருமளவுக்கு பொருளாதார வலுக்குறைந்த மாணவர்களிடமே என்பதனை உணர்ந்திருப்பதனால், இயன்றளவு குறைந்த நிலையில் நிறைவான அறிவுச் சேவையை அளிப்பதில் நாம் மிகக் கவனம் கொண்டுள்ளோம்.

சர்வ வளாக மாணவர்களும் ஒன்றிணைந்தே இந்த அறிவலை வட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இதுகாலவரை தனித்தனி வளாகங்களிருந்தும் வளாகத் தனிப்பட்டவர்கள் மூலமும் இடையிடையே ஓரிரு சஞ்சிகைகள் வெளிவந்தபோதும் இப்படிப்பட்ட - ஓர் சர்வ வளாக ரீதியில் இணைந்த இயக்க அடிப்படையிலான தமிழ்ச் சஞ்சிகை வெளியீடு எதுவும் இடம் பெற்றதில்லை. இந்தவகையில் முதன் முதலில், இவ்விதமான ஓர் ஆரம்ப முயற்சியில் ஆர்வமுள்ள பலர் இணைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதும் வரவேற்கத் தக்கதுமாகும்.

எமது 'அறிவலை வட்டம்' பல புதிய அறிவியற் பிரச்சனைகள், விடயங்கள் பற்றித் தகுதியானவர்களைக் கொண்டு பல 'உரையாடல்களை' நிகழ்த்துவதோடு, இவ் விடயங்கள் பற்றித் தனியான சில வெளியீடுகளையும் வெளியிட இருக்கின்றது. இத்துடன் பல்கலைக் கழகத்தில் சிறப்புக் கல்வி பயிலும் மாணவர்களை முன்னிட்டு குறிப்பிட்ட பாடங்களின் அடிப்படையில் எமது சஞ்சிகை சிறப்பிதழாகவும் வெளிவந்து அறிவலை எழுப்பும்.

எமது இச்சஞ்சிகையில் கட்டுரைகளை எழுதும்எல்லாக் கட்டுரையாளர்களும் அவர்கள் தம் கருத்துக்களைத் தயக்கமின்றி எடுத்துக் கூறுவதற்கு — ஏனைய சில சஞ்சிகைகள் போலன்றி பூரணசுதந்திரம் அளிக்கும்.

எமது இம் முயற்சி பெரும்பாலும் மாணவர்களுக்காகவே எனினும் அறிவுத் துறையில் ஈடுபாடுகொண்ட அனைவரையும் இணைக்குமொன்றாகவும் இருக்குமென நாம் நம்புகின்றோம். எனவே 'தரம்' அறிந்த வாசகர் கூட்டம் ஒன்று நிரந்தரமாகவே எமக்குண்டு என்ற நேர்மைத் துணிவுடன் ஆரம்பிக்கின்றோம். எனவே ஏனைய பத்திரிகைகளின் ஆரம்ப வெளியீட்டைப் போல், நாம் நாட்டில் பத்திரிகைகள் தோன்றி, மறைவதுபற்றிய பரிதாபகரமான வரலாற்றைப் பலகீனமான குரலில் முன்னுரையில் — முதலுரையில் — முணு முணுத்துக் கொண்டிருக்கப் போவதில்லை.

ஆதாய நோக்கமின்றி, ஒருவித சேவை நோக்குடனேயே நாம் இதனைத் தொடக்கியுள்ளோம் என்பதால் நியாயமாகவே ஏற்படவேண்டிய ஆத்ம பலமும், திருப்தியும் எமக்குண்டு அத்துடன் எமது இந்தச் சோதனை முயற்சி தொடர்ந்து வெற்றி பெற்று வளரும் என்ற நியாயபூர்வமான நம்பிக்கையும் எமக்குண்டு.

எமது அறிவலை வட்டத்தின் சகல அங்கத்தவர்களும் இச்சஞ்சிகையில் சம உரிமையும், கடமையும் கொண்டவர்களே! இச் சஞ்சிகைக்கான விடயதானங்களைச் சிரமம் பாராது சீக்கிரமே எமக்களித்த கட்டுரையாசிரியர்களும், விளம்பரங்கள் தந்துதவிய விற்பனை ஸ்தாபனங்களுக்கும், இவற்றைப் பெற உதவியவர்களுக்கும், அழகாக - விரைவில் இதனை வெளியிட உதவிய கொமேஷல் அச்சகத்தார்க்கும் எமது மனம்நிறைந்த நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம்.

இறுதியாக, இச்சஞ்சிகை பற்றிய சகல விதமான அபிப்பிராயங்களையும் வசகர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

ஆ–ர்.

---

# அறிவலை வட்ட அங்கத்தவர்கள்

M. A. அப்துல்காதர், S. M. ஹனிபா, K. தவராஜா A. M. மொகிதீன், K. நடராஜா, J. நைஜில், N. செல்வகுமார், S. சுதந்திரசெல்வி, M. ஜெயந்தி இருஷ்ணபாலன், V. செல்வரட்ணம், ஆசீர்வாதம், N. பரமானந்தன், P. மகேஸ்வரன், P. தேவகி, S. சிவராசா, K. தர்மானந்தசிவம், A. நித்தியானந்தராசா, உமாகாந்தன், தேவதாஸ் (Dip. in Hons), (W. C. E.), M. திருக்குமாரன், S. சிவராஜசிங்கம், A. சிவநாதன், M. ராஜ்குமார், K. தவராஜா, L. ஹரிநேசன், S. சுப்பிரமணியம், N. சுப்பிரமணியம், S. சரவணபவன், K. பரராஜசேகரம், N. நளாயினி, V. மாணிக்கவாசகர், S. K. யோகநாதன், T. பாலசுப்பிரமணியம், N. நவரட்னம், N. லிங்கசாமி, V. யோகேஸ்வரி, R. குணனந்தன், N. ஸ்ரீபதி

---

# நிலநெய்யின் உலகலாவிய நெருக்கடியும் அதில் இலங்கையின் பங்கும்

திரு. சுப்பையா B. A. (Hons)
உதவி விரிவுரையாளர்
புவியியற்றுறை
பேராதனைவளாகம்

வர்த்தக ரீதியாகப் பொருட்களின் விலை 1973, 1974ம் ஆண்டுகளில் தொடர்ச்சியாகவும், விரைவாகவும், அதிகரித்தமை, எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் பொருட்களின் விலையை அதிகரிக்கச் செய்ததோடு மட்டுமல்லாது அவர்கள் இவ்வர்த்தகத்தில் ஏகோபித்த அதிகாரம் செலுத்தவும் காரணமாயிருந்தது. அண்மைக் கால சனத்தொகைப் போக்கு, விவசாய நடவடிக்கைகள், வீட்டுப்பாவனைகள், போக்குவரத்து, மின்சார உற்பத்தி, என்பவற்றில் எண்ணெய் அதிகமாகப் பயன்படுத்தக் கூடிய சார்புள்ளதால் இதனது தொடர்ச்சியானதும், விரைவானதுமான விலையேற்றம் மனித நடவடிக்கைகளில் ஒரு சுமையாகக் காணப்படுகின்றது. பௌதீக ரீதியான பற்றுக்குறை, காலநிலைமாற்றம், புவியியல் ரீதியாக இவ்வெண்ணெய் உற்பத்திசெய்யும் நாடுகளின் பரம்பல் இப் பிரச்சனைக்குரிய நிலையை மேலும் வளர்த்துச் சென்றுள்ளது. தொடர்ந்து எண்ணெய் உற்பத்திசெய்யும் நாடுகளின் பரம்பல், இப் பிரச்சனைக்குரிய நிலையை மேலும் வளர்த்துச் சென்றுள்ளது. தொடர்ந்து எண்ணெய் உற்பத்திசெய்யும் நாடுகளின் புவிசார் அரசியல் காரணிகள் இதனையொரு பெரும் பிரச்சனையாக்த் தோற்றுவித்துள்ளது.

1947ம் ஆண்டு தொடக்கம் 1975ம் ஆண்டுவரையான காலப் பகுதியில் உலக மசகு எண்ணை (CRUDE OIL) 6·9% அதிகரிப்பைக் கொண்டிருந்தது. 1960 - 70க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இது 6 5% அதிகரிப்பினைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இதில் மத்திய கிழக்கு நாடுகள் 38% இனையும், ஏனைய பிரதான எண்ணெய் உற்பத்தி நாடுகள் 22 வீதத்தினையும் உற்பத்திசெய்கின்றன. அது மட்டுமல்லாது இலத்தின் அமெரிக்க நாடுகளில் வெனிசுலா, றெனிடாட் போனற நாடுகளும், ஐக்கிய அமெரிக்கா, அலாஸ்கா போன்ற நாடுகளும், தென்கிழக்காசியா நாடுகளில் இந்தோனேசியா போன்ற நாடுகளும் ஒரளவு உற்பத்தி செய்கின்றன. அண்மைக் காலத்தில் வடகடல் பகுதியில் பெறப்படும் நிலநெய் இங்கிலாந்தின் நீண்டகால அந்நியச் செலவாணிப் போக்கில் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. இந்நாடுகளில் மத்திய கிழக்கு நாடுகளிலே அதிகமாக நிலநெய் இருப்பினைக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. 1957ம் ஆண்டு ஆபிரிக்க நாடுகளின் மொத்த உற்பத்தி 2·7 மில்லியன் மெட்ரிக் தொன்னுசுக் காணப்பட்டது இது உலக மொத்த உற்பத்தியில் 0·3% மாகவும் உள்நாட்டுத் தேவையினைப் பூர்த்திசெய்யக் கூடியதாகவும் காணப்பட்டது. இந்நாடுகள் 1976ம் ஆண்டு 279·5 மில்லியன் மெட்ரிக் தொன் உற்பத்திசெய்தது. இது உலக மொத்த உற்பத்தியில் 9·8% மாகக் கணிப்பிடப்பட்டது. ஆனல் பிரதானமாக அல்ஜீரியா, லிபியா, நைஜீரியா போன்ற நாடுகள் பிரதான உற்பத்தியாளராக உள்ளன. இதனைப் பின்வரும் தரவுகள் விளக்குகின்றன.

| ஆண்டு | ஆபிரிக்கா உற்பத்தி | உலக் உற்பத்தி | ( மில்./மெட்றிக் தொன்னில் ) உலக உற்பத்தியில் ஆபிரிக்காவின் பங்கு (விகி தாசாரம்) |
|---|---|---|---|
| 1950 | 2·6 | 522·1 | 0·5 |
| 1960 | 13·8 | 1056.9 | 1·3 |
| 1961 | 23.7 | 1125.4 | 2·1 |
| 1962 | 38·9 | 1220·8 | 3·2 |
| 1963 | 57·1 | 1309·4 | 4·4 |
| 1964 | 82·4 | 1409·6 | 5·8 |
| 1965 | 106·9 | 1511.1 | 7·1 |
| 1966 | 136·1 | 1694·7 | 8·0 |
| 1967 | 152·3 | 1821·5 | 8·4 |
| 1968 | 196·0 | 1990·4 | 9·8 |
| 1969 | 249·1 | 2145·0 | 11·6 |
| 1970 | 299·8 | 2348·1 | 12·8 |
| 1971 | 280·5 | 2478·4 | 11·3 |
| 1972 | 279·2 | 2595·0 | 10·8 |
| 1973 | 292·4 | 2247·8 | 10·3 |
| 1974 | 276·3 | 2870·3 | 9·6 |
| 1975 | 245·4 | 2708·0 | 9·1 |
| 1976 | 279 5 | 2843·8 | 9 8 |

மூலம்: 1) B. P. Statistical Reveiw of the World Oil Industry. 1975 (London 1976)

2. The Petroleom Economist (London) ×(II) (1st January 1975 and July 1977) × (IV)

3) World Oil Houston 15th February 1976.

மத்திய கிழக்கு நாடுகளில் இன்று பிரதான மாக் சவூதி அரேபியாவே அதிக்மான நில நெய் இருப்பினைக் கொண்டதாகக் காணப் படுகின்றது. அண்மைக் காலங்களில் இத னது உற்பத்தி குறையும் போக்கும் அவ தானிக்கப் பட்டுள்ளது. 1974ம் ஆண்டு இதனது உற்பத்தி உச்சநிலையை அடைந்து பின்னர் குறைந்து செல்லும் போக்கினைக் கொண்டுள்ளதை கீழ்வரும் எண்ணெய் உற்பத்தி அளவுக்ளும், விலையேற்றத்தினை வருமானம் கூடிச் செல்லும் அளவுக்ளும் காட்டுகின்றன.

| ஆண்டு | எண்ணெய் வெளியீடு (பீப்பாய்களில் | வருமானம் (மில்/டொலரில்) |
|---|---|---|
| 1950 | 199·5 | 56·7 |
| 1951 | 278·0 | 110·0 |
| 1955 | 356·6 | 340·8 |
| 1956 | 366·8 | 290·2 |
| 1960 | 481·4 | 333·7 |
| 1965 | 804·9 | 664·1 |
| 1967 | 1023·8 | 903·6 |
| 1970 | 1386·7 | 1214·0 |
| 1971 | 1740·6 | 1884·9 |
| 1972 | 2202·0 | 2744·6 |
| 1973 | 2772·6 | 4340·9 |
| 1974 | 3095·1 | 2257·3 |
| 1975 | 2582·0 | 2567·6 |

மூலம்: Current History - January 1977 (Page 7)

தொடர்ச்சியான விலையேற்றமே சவூதி அரேபியாவின் மசகு எண்ணெய் உற்பத் திக்கு அடிப்படைக் காரணமாக இருந்தது. 1970-1974ம் ஆண்டிற் கிடைப்பட்ட காலத் தில் எண்ணெய் உற்பத்தியானது 123·2% அதிகரிப்பினையும், வருமானமானது 1759% மான அதிகரிப்பினைக் கொண்டதுடன் 1974ம் ஆண்டு தொடக்கம் 75ம் ஆண்டுக் கிடைப் பட்ட காலத்தில் உற்பத்தி 16·6% குறைந் தும் வருமானம் 14·0% அதிகரித்தும் காணப் பட்டது.

நிலநெய் உற்பத்தியானது பெருமளவு மூலதனத்தையே கொண்டது. முதலீடு — ஆய்வுக்கான செலவீடுகள், துளையிடுதல் புவிச்சரிதவியல் ஆய்வுகள், எல்லை நில நெய் வயல்களைப் பயன்படுத்துதல், நிலநெய் சுத்திகரித்தல், போக்கு வரத்து ரீதியான செலவீடுகள், தரைமார்க்கமாக குழாய் வழி களை அமைத்தல், கடல்மார்க்கக் கப்பல் கட்டணங்கள் உயர்ந்தமை ஏனைய உள்ளூர் போக்குவரத்து சாதனங்களின் விலை உயர்வு என்பனவெல்லாம் நில நெய் விலை உயர் வையும், மூலதனத்தேவையதிகரிப்பையும் கொண்டுவந்தது.

இந்நாடுகளின் நிலநெய் கம்பனிகள் பெருமளவு ஐரோப்பிய வட அமெரிக்கக் கம்பனிகளாக இருக்கின்றன. வருமானத்தின் ஒருபகுதி குடியேற்றவாத காலத்தில் தாய் நாடுகளுக்குச் சென்றன. 50 : 50 வருமானம் அந்நிய கம்பனிகளுக்கே வழங்கப்பட்டது. சுதந்திரத்தின் பின்னர்கூட இந்நாடுகள் நவீன குடியேற்ற வாதத்தின் காரணமாக இந்நிலையைத் தொடர்ந்தும் அனுபவித்து வருகின்றன. இந்நாடுகளின் அந்நியச் செலாவணிப் பிரச்சனையும், அந்நியக் கம்பனிகளின் தலையீடும் இந்நாடுகளின் நிலநெய் உற்பத்தி செலவீடுகள் அதிகரிப்புக்கும் அது தொடர்பாக விலையேற்றத்திற்கும் காரணமாக அமைகின்றன.

நிலநெய் வயல்கள், ஆலைகளில் தொழில் புரிபவர்கள், தொழிற்திறமைமிக்கவர்கள் இதனால் இவர்களது கூலி ஏனைய தொழிலாளர்களிலும் பார்க்க அதிகமானது. தொழில் நுட்ப ரீதியில் பயிற்சி பெற்றவர்கள் கூடிய ளவான ஊதியம் பெறுகின்ற காரணத்தால் உற்பத்திச் செலவும் அதிகமாகக் காணப்படுகின்றன.

ஒரு பிரதேசத்தில் ஒரு சில வயல்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஆய்வுகள் பயனற்றுக் காணப்படுமாயின் ஒரு சில வயல்களிலிருந்து பெறப்படும் நில நெய்யில், ஆய்வுகளுக்குச் செலவிடப்பட்ட செலவினையும் பெற முயலும்போது கூடியளவான உற்பத்திச் செலவு பெருகுகின்றது. அண்மைக் காலத்தில் தொடர்ந்தேர்ச்சியான ஆய்வின் விளைவாக ஆபிரிக்க நாடுகள் சில கூடிய உற்பத்தியினைச் செய்வதோடுகூடிய வருமானத்தையும் வெல்லுகின்றது.

வருமானம் — மில்லியன் ரூபாவில்

| | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1975 | 1976 |
|---|---|---|---|---|---|---|---|
| லிபியா | 1295 | 1766 | 1598 | 2800 | 6000 | 5100 | 8090 |
| நைஜீரியா | 411 | 915 | 1174 | 2000 | 8900 | 6570 | 2900 |
| அல்ஜீரியா | 325 | 350 | 700 | 900 | 3700 | 3375 | 5000 |

மூலம் : The Journal of Modern African Studies Vol. 15 No. 2 (Page 189)

இன்று ஆபிரிக்க நாடுகள் நில நெய் உற்பத்தியில் முக்கியத்துவம் பெற்று வருவதனை மேற்காட்டிய அட்டவணை விளக்குகின்றது. அல்ஜீரியாவில் 1974—77 க்கு இடைப்பட்ட காலத்தில் 13,000 மில்லியன் டொலர்கள் நில நெய் உற்பத்திக்காய் ஒதுக்கப்பட்டது. ஆனால் உலக ரீதியான விலைப்போக்கு தொடர்ச்சியானதாயும், விரைவாயும் அதிகரித்ததன் காரணமாக இத்தொகை 28,000 மில்லியன் டொலராகச் செலவிடப்பட்டது. ஆபிரிக்க நாடுகளில் மட்டுமின்றி ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நில நெய் உற்பத்தித் தொழில் மற்றைய தொழில் துறைகளிலும் பார்க்கக் கூடிய வருமானம் தருகின்ற காரணத்தினால் ஏனைய தொழில்கள் புறக்கணிக்கப்படுவதும் உண்டு. மேலும் விவசாய, கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு இரண்டாம்தர முக்கியத்துவமே கொடுக்கப்படுகின்றது. இந்நாடுகளின் பொருளாதார விருத்தி நோக்கம், சென்மதிநிலுவைப் பிரச்சனைகள் காரணமாக, நில நெய் வளம் காணப்படுகின்ற பட்சத்தில் அத்துறையையே மேலும் வளர்க்க முயல்கின்றன. அந்நிய செலாவணிப் பிரச்சனைக்ளும் அந்நிலைமையை மேலும் ஊக்குவித்து வளர்த்தது.

உலகின் நிலநெய் உற்பத்தி, வர்த்தகம் என்பனவற்றை அவதானித்தால் அதில் சவூதி அரேபியாவே அதிகமாக உற்பத்தி செய்யும் நாடாகவும், ஐக்கிய அமெரிக்க நாடுகள் அதிகமாக இறக்குமதி செய்யும் நாடாகவும் உள்ளது. இந்த இரு நாடுகளின் கூட்டு ஒப்பந்தங்கள், ஏனைய கைத்தொழிலில் விருத்தியுற்ற, விருத்தியுறும் நாடுகளையும் பாதிக்கக் கூடியது. 1973-74ம் ஆண்டுகளில் ஏற்பட்ட விலைப்போக்கு ஐரோப்பிய, ஜப்பானிய வெளிநிய நாட்டுக் கொள்கையையே மாற்றியமைக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதாரக் கூட்டுறவுக்கான அமைப்பு (O.C E.D.) நாடுகளில் ஐக்கிய அமெரிக்க நாடுகள், மேற்கைரோப்பா, ஜப்பான் போன்ற நாடுகள் பிரதானமாக உள்ளன. எண்ணெய் உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்யும் நாடுகளில் (O P.E.C.) சவூதியரேபியா. மத்திய கிழக்கு நாடுகள் உள்ளன. எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் சவூதியரேபியாவே பிரதானமாகக் காணப்படுகின்றது. இதனது நிலநெய் உற்பத்திக் கம்பனிகள் அராபிய—அமெரிக்கக் கம்பனிகளாகக் காணப்படுகின்றதன் விளைவாக இலாபத்தின் அரைப்பங்கு கம்பனிகளின் வாயிலாக மேலைநாடுகளுக்குச் செல்கின்றன.

அராபிய-இஸ்ரேல் பிரச்சனையயடுத்து நிலநெய் நுகர்வில் நீண்டகாலத்தின் பின்னர் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 1973-ம் ஆண்டு 47·8 மில்லியன் பீப்பாய்கள் — ஒரு நாளைக்கு — பயன்படுத்தப்பட்டது. 1975ம் ஆண்டு 45·1 மில்லியன் பீப்பாய்கள் — ஒரு நாளைக்கு — பயன்படுத்தப்பட்டது. இத்தகைய நுகர்வு ஐக்கிய அமெரிக்க நாடுகளின் சக்திப் பாதுகாப்பு நுகர்வுக் கொள்கைகளுடன் தொடர்பானது. பொதுவாக குறைவிருத்தி நாடுகள், அதிலும் எண்ணெய் உற்பத்தி செய்யாத ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகள் 1974ம் ஆண்டில் 2·4 மில்லியன் பீப்பாய்கள் — ஒரு நாளுக்கு— அல்லது எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் உற்பத்தியில் 8% வீதத்தினையே பெற்றது. இந்நிலை தொடருமாயின் — ஏனைய பௌதீக அரசியல் காரணங்கள் விளைவாக 1980ம் ஆண்டு 0·6 மில்லியன் பீப்பாய்கள் ஒரு நாளுக்கும், 1985ம் ஆண்டு 0·1% மில்லியன் பீப்பாய்கள் ஒரு நாளைக்கும் என்ற அளவுகளாகவே பாவனை குறைந்து வரும்.

இன்றுள்ள எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் நாடுகளின் இறக்குமதியளவு என்ற போக்கினை ஆராய்ந்தால் அதிகூடிய, நடுத்தர, குறைவான அதிகரிப்பு வீதங்களுடன் இந்நாடுகளின் எதிர்காலப் போக்குக்களைக் கீழ்வரும் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

**1985ல் எதிர்பார்க்கப்படும் ஏற்றுமதி (M. b / for a day)**

| கொள்கை | சவூதி அரேபியா உற்பத்தி | ஏற்றுமதி | ஒப்பேக் (Opec) உற்பத்தி | ஏற்றுமதி |
|---|---|---|---|---|
| குறைவான | 6·3 | 5·5 | 34·0 | 29·9 |
| குறை-நடுத்தரம் | 8·5 | 7·7 | 36·2 | 32·1 |
| நடுத்தர-உயர் | 11·8 | 11·0 | 39·6 | 35·5 |
| உயர்வான | 15·0 | 14·1 | 42·7 | 38·6 |

மூலம் : Foreign Affairs — April 1977 (Page 494—516)

இதனளவுகள் 1960—73க்கு இடைப்பட்ட காலத்து உற்பத்தியளவுகளின் அடிப்படையில் இத்தகைய வளர்ச்சி வீதங்கள் அளவிடப்பட்டுள்ளன. கூடிய வளர்ச்சி 4·8% — 4·6%, நடுத்தரவளர்ச்சி 4·3% — 4·1% குறைவானவளர்ச்சி 3·8% — 3·6%. இது தொடர்பாக 1985ம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் இறக்குமதி அளவீடுகள் பின்வரும் பட்டியல் காட்டுகின்றது.

1985ம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் இறக்குமதி (M. b / d)

| | U.S.A. ஐ.அ.நா. | OCED நாடுகள் |
|---|---|---|
| கூடியவளர்ச்சி | 11·9 | 38·8 |
| நடுத்தர வளர்ச்சி | 9·7 | 35·0 |
| குறைவான வளர்ச்சி | 8·2 | 31·9 |
| கட்டுப்பாட்டுக் கொள்கைகளுடன் | 4·3 | 24·3 |

மூலம் : OCED world energy out look 1977, (Pages 9—91, 94—96)

கடல் பகுதிகளில் மாற்று எரிபொருட்கள் பெறப்பட்டது. இக்காலப் பகுதியில் இதனது நுகர்வு ஓரளவு மாற்றம் அடைந்துள்ளது. இந்த நாடுகளின் உற்பத்தி, நுகர்வு, கைத்தொழிலாக்கம் என்பவற்றினை அடிப்படையாகக்கொண்டும், 1974-1975ம் ஆண்டு வளர்ச்சி வீதத்தினைக் கொண்டும் 1985ம் ஆண்டில் எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளில் ஐரோப்பா, கனடா ஐக்கிய அமெரிக்க நாடுகள்,ஜப்பான்போன்ற வற்றில் எண்ணெய் உற்பத்தியின் அளவு விலைப்போக்கு என்பவற்றின் அடிப்படையாக் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதங்கள் கணிப்பிடப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1974 — 1980 | — OCED | ஐரோப்பா | 3·6% |
| | | கனடா | 4 8% |
| | | ஐக்கிய அமெரிக்கா | 4·4% |
| | | ஜப்பான் | 6 0% |
| 1980 — 1985 | — OCED | ஐரோப்பா | 4·1% |
| | | கனடா | 4·8% |
| | | ஐக்கிய அமெரிக்கா | 3·5% |
| | | ஜப்பான் | 6·6% |

மூலம்: Foriegn Affairs — April 1977

இவ்வளவீடுகளில் ஜப்பானிய அளவுகள் வித்தியாசப்படுவதற்கு அந்நாடு இறக்குமதி செய்யப்பட்ட நிலநெய்யில் தங்கியிருப்பதே காரணமாகும்

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் ஒன்ருன இலங்கை குறைவான வாழ்க்கைத் தரம், முதல்விளைவு ஏற்றுமதிப் பொருட்களில் அதனது வெளிநாட்டுச் செலாவணி தங்கியுள்ளமை, விவசாயத் துறையிலிருந்து கைத்தொழில் துறைக்கு மாறும் போக்கு என்பவற்ருல் கூடிய நிலநெய் நுகர்வினைக் கொண்டதாகக் காணப்படுகிறது. இலங்கையின் விரைவான பொருளாதார வளர்ச்சி நோக்கும், மேலும் கைத்தொழில் துறைக்குக் கூடிய முக்கியத்துவம் கொடுப்பதாக அமைவதால் இதனுடைய தேவை மேலும் அதிகரித்துள்ளது. சனத்தொகை வளர்ச்சியால் கூடியளவு நுகர்வு, நகராக்கம், போக்குவரத்து சாதனங்கள், அதிகமாக அசைவற்ற குடும்பங்கள், விவசாயத்துறையின் போக்குவரத்துத் தேவைக்கான போக்குவரத்துப் பயன்பாடும் வேறு தேவைகள். உதாரணமாக நீர் இறைக்கும் இயந்திரங்கள்-போன்றவற்றின் காரணமாக இதனது தேவை மேலும் அதிகரித்துள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் இதனது அவசியம் முக்கியமானதாகக் காணப்படுகின்றதனுல் இலங்கையின் இறக்குமதியளவுகளில் கணிசமான பங்கு நில நெய்க்காசப் பயன்படுத்தப்படுகின்றது. இதனைப் பின்வரும் பட்டியல் காட்டுகின்றது.

(மில் / ரூபாய்களில்)

| ஆண்டு | பெற்ருேல் இறக்குமதி | மொத்த இறக்குமதி | இ. மா. இறக்குமதியில் பெற்ருேலின் விகிதாசாரம் |
|---|---|---|---|
| 1960 | 124 | 1960 | 6·3% |
| 1961 | 127 | 1703 | 7·5% |
| 1962 | 126 | 1660 | 7·6% |
| 1963 | 119 | 1490 | 8 0% |
| 1964 | 93 | 1975 | 4·7% |
| 1965 | 109 | 1474 | 7·4% |

| ஆண்டு | பெற்றோல் இறக்குமதி | மொத்த இறக்குமதி | (மில்/ரூபாய்களில்) இ. மா. இறக்குமதியில் பெற்றோலின் விகிதாசாரம் |
|---|---|---|---|
| 1966 | 130 | 2028 | 6·4% |
| 1967 | 112 | 1738 | 6·4% |
| 1968 | 196 | 2173 | 9·0% |
| 1969 | 156 | 2543 | 6·1% |
| 1970 | 58 | 2313 | 2·5% |
| 1971 | 26 | 1986 | 1·3% |
| 1972 | 38 | 2064 | 1·8% |
| 1973 | 295 | 2715 | 10·9% |

மூலம் : இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் (1960—1975)

1960ம் ஆண்டில் மொத்த இறக்குமதியில் 6·3%மாக இருந்த அளவு 1975ம் ஆண்டு 16·6% மாக அதிகரித்துள்ளது. காரணம் 1973, 74ம் ஆண்டுகளில் ஏற்பட்ட விலை உயர்வே காரணம் என்று கூறலாம். மக்களின் வாழ்க்கைச்செலவதிகரிப்புக்கு, இக் காலத்தில் ஏற்பட்ட நிலநெய் விலையதிகரிப்பே காரணம் என்றும் பின்வரும் தரவுகள் காட்டுகின்றன.

(1952=100)

| ஆண்டுகள் | கொழும்புநகர வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியில் வெளிச்சமும், எரிபொருளும் | ஆண்டுகள் | கொழும்புநகர வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியில் வெளிச்சமும் எரிபொருளும் |
|---|---|---|---|
| 1957 | 97·3 | 1967 | 96·5 |
| 1958 | 101·0 | 1968 | 103·2 |
| 1959 | 102·4 | 1969 | 124·9 |
| 1960 | 102·7 | 1970 | 136·1 |
| 1961 | 104·4 | 1971 | 140·8 |
| 1962 | 105·6 | 1972 | 145·9 |
| 1963 | 103·0 | 1973 | 164·4 |
| 1964 | 103·2 | 1974 | 221·0 |
| 1965 | 100·7 | 1975 | 231·0 |
| 1966 | 95·9 | 1976 | 265·2 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்

1957ம் ஆண்டு 97·3% மாக இருந்து 1967ம் ஆண்டு 96·5%மாகக் குறைந்து 1969ன் பின்னர் குறைந்தளவு வளர்ச்சி வீதங்களுடன் 1973ன் பின்னர் முன்னைய ஆண்டிலும் இருமடங்காக அதிகரித்துள்ளமையைக் காணலாம்.

இலங்கை சனத்தொகைப் போக்கினை அவதானிக்கும்போது இந்நிலை மேலும் பிரச்சனையாக அமையலாம். பிறப்பு விகிதம் 29·5/1000 என்றும் இறப்பு விகிதம் 7·7/1000 எனக் கொண்டும் ஐக்கிய நாட்டு சனத்தொகைக் கணிப்பீட்டாளர்கள் பின்வருமாறு கணிப்பிட்டுள்ளனர்.

(1000 மக்களில்)

| ஆண்டு | இலங்கை | வளர்ச்சியடைந்த நாடுகள் | குறைவிருத்தி நாடுகள் | உலகம் |
|---|---|---|---|---|
| 1950 | 7678 | 857305 | 1643908 | 25012113 |
| 1955 | 8723 | 914772 | 1807554 | 2722326 |
| 1960 | 9889 | 975748 | 2010230 | 2985979 |
| 1965 | 11164 | 1036355 | 2252763 | 3288119 |
| 1970 | 12514 | 1084018 | 2526359 | 3610377 |
| 1975 | 13986 | 1131624 | 2836180 | 3967864 |
| 1980 | 15465 | 1131002 | 3193108 | 4374110 |
| 1985 | 16992 | 1230706 | 3585932 | 4816537 |
| 1990 | 18530 | 1277396 | 4002621 | 5280017 |
| 1995 | 20002 | 1319849 | 441714 | 5762564 |
| 2000 | 21139 | 1360245 | 4894133 | 6254377 |

மூலம் : United Nations — Population Projection No. 61 1977

இலங்கையின் சனத்தொகை 1971ல் 12·7 மில்லியனாக இருந்தது. இக்கணிப்பீட்டின்படி இதனது சனத்தொகை 2000 ஆண்டில் 21 மில்லியனாக மாறும் அப்போது உலக சனத்தொகை 6 மில்லியனாக இருக்கும். அச்சூழ்நிலை 1985ம் ஆண்டு குறைவிருத்தி நாடுகளுக்கு ஒப்பெக் (OPEC) நாட்டிலிருந்து வழங்கப்படும் 0 1 M. b/d அளவுகள் வழங்கப்படுமா என்பது பிரச்சனை. 1985ம் ஆண்டு 0·1 M. b/d அளிக்க படுமாயின் அந்நிலையில் இலங்கையின் சனத்தொகை 16 மில்லியனாகவும், உலக சனத்தொகை 4·8 மில்லியனாகவும் அமையும். குறைவிருத்தி நாடுகளுக்கு வழங்கப்படும் இத் தொகையில் இலங்கைக்குரிய பங்கு மிகவும் சிறியதாகவே அமையும். அந்நிலையில் எமது நாட்டு மக்களின் எண்ணெய் நுகர்வு கட்டுப்படுத்தப்படுவதுடன் இந்நாட்டின் பொருளாதார நிலைமைகளும் பாதிக்கப்படலாம். 1973—74ம் ஆண்டுகளில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விலையை அதிகரிக்கத் தூண்டப்பட்டதன் காரணமாக அதனது விற்பனையளவு குறைந்தது.

1965ம் ஆண்டு 176மில்லியன் கலனாகவும் 1970ம் ஆண்டு 239 மில்லியன் கலனாகவும் 1972ம் ஆண்டு 245 மி. கலனாகவும் 1973ல் 259 மி கலனாகவும் 1974ல் 201 மி. கலனாகவும் 1975ம் ஆண்டு 193 மி. கலனாகவும் 1976ல் 193மில். கலனாகவும் குறைந்தது. 1977ம் ஆண்டும் அதன் விற்பனை குறைந்து செல்வதற்கு 1973 தொடக்கம் ஏற்பட்ட விலையதிகரிப்பே காரணம் எனக் கூறலாம். இதனால் எமது நாட்டின் நோக்கம் ஏனைய நாடுகளின் தீர்மானங்களில் தங்கியுள்ளதால் இத்துறையில் பெரும் பிரச்சனையை எதிர் நோக்குகின்றது. இத்தகைய பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண வேண்டியது அவசியமாகின்றது. பின்வரும் வழிவகைகளைக் கையாண்டு இப்பிரச்சனைகளின் வேகத்தைத் தணிக்கலாம்.

1) சிறந்த வலுப்பற்றிய கொள்கையை உருவாக்கி பொறுப்பான முறையில் நிர்வகித்தல்.

5) நில நெய் வலுவின் நுகர்வினைத் தற்காலிகமாகக் குறைப்பதும் பின்னர் கட்டுப்படுத்துவதும்.

3) வாயுக்கள் மூலம் இயந்திரங்களை இயக்குதல்

4) சூரிய சக்தியைப் பயன்படுத்துதல்.

5) மின்சக்தியை விருத்திசெய்தல்

6) எரிபொருள் தேவையில் நில நெய்யின் நுகர்வினைக் குறைத்து காடுகளின் கழிவுப் பொருட்களையும், சூரிய சத்தியையும் பயன்படுத்தல்.

7) விவசாய உழவு இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கு மின்சார வசதியளித்தல்

8) எரிபொருள் நோக்கமாக - காடுகள் வீணாக அழிக்கப்படுதலைத் தடுத்தல்

9) உலர்வலயப் பகுதிகளில் மீண்டும் காடாக்கல் முயற்சிகளை மேற்கொள்ளல்.

10) வளிமண்டல மாசுபடும் தன்மையைக் குறைத்தல்

11) வலுவைத்தரக்கூடிய காடுகளைப் பாதுகாத்துப் பயன்படுத்தல்.

# இந்துப் பண்பாட்டு வரலாற்றில் இதிஹாசங்களும் புராணங்களும்

நா. சுப்பிரமணிய ஐயர் M. A.

இந்துப் பண்பாட்டு வரலாற்றிலே இதிகாச புராணகாலம் ஒரு முக்கியமான திருப்பு முனையாகும். வேத, உபநிடத காலம் தொடக்கமாக வளர்ந்து வந்த தத்துவக் கருத்துகளும்; வழிபாட்டு முறைகளும் மக்கள் மத்தியில் பரவத் தொடங்கிய காலம் இது எனலாம். வேதங்கள், உபநிடதங்கள் ஆகியவை அறிஞர் மட்டத்திலே, சமுகத்தில் உயர்ந்தோர் மட்டத்திலே தத்துவ விளக்கத்தையும் கிரியை விளக்கத்தையும் கொடுத்துவந்தன. இவை எசமானைப்போல கட்டளையிடும் தன்மை வாய்ந்தன. பொது மக்கள் மத்தியில் சமயத்தைப் பரப்புவதற்கு இவை அதிகம் பயன்படா. இவ்வகையில் சமயக் கருத்துக்களை சாதாரண பொது மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காக எழுந்தவையே இதிகாச புராணங்களாகும். இவை ஒரு தோழனைப்போல மக்களுக்கு சமயக் கருத்துக்களைக் கூறவல்லவை. அதனால் இவை "சுகிருத் சம்ஹிதம்" எனப்பட்டது. நண்பனைப் போல அறிவுரை கூறுவோர் இதனைப் போல தேவைக் கேற்ப மக்கள் சுவைக்கத் தக்க வகையில் கதைகள் பொதிந்து சொல்லுவது மரபு.

சமயக் கருத்துக்களை கதைகள் மூலம் கூறுவது பொது மக்களுக்கு மிகவும் பயன் படத்தக்க ஒரு முறையாகும். ஒன்றைச் செய் என்று கட்டளை இடுவதைவிட, அவன் அடையும் பெருமை பற்றிக் கூறுவது கூடியளவு பயன்தரக்கூடியதாகும். "தந்தை தாய் பேண்", "உண்மை பேசு", "பெரியோரைக் கனம் பண்ணு" போன்ற உபதேசங்களைக் கூறும்போது அவற்றை உணர்வதை விட அவ்வுபதேசங்களால் மேன்மையுற்றோரது கதைகளைப் படிப்பதன் மூலம் அவற்றை உணருவது மிகப் பயன் தரத்தக்கதாகும். இவ்வகையிலே இதிகாச புராணங்கள் இந்து மத வரலாற்றிலே முக்கியத்துவம் பெறுகின்றன.

இதிகாசங்கள் என்பவை முக்கியமாக இராமாயணம், பாரதம் என்னும் இரண்டுமாம். சிவரகசியம் என்னும் இதிகாசம் ஒன்றும் உண்டு. இராமாயணமும் பாரதமும் மிக முக்கியமாக எடுத்து ஆராயப்படத்தக்கன. இரண்டும் ஏறக்குறைய சம காலத்தன. இரண்டும் பண்பாட்டு வளர்ச்சியடைந்த ஒரு சமுதாயத்தைக் காட்டுவன. இப்பண்பாட்டு வளர்ச்சி ஊடாக சமுகத்தில் ஆங்காங்கு காணப்பட்ட சமுக சூழல்களைத் திருத்தி உயரிய சமுக வாழ்க்கை ஒன்றை மக்களுக்கு அறிவுறுத்தும் நோக்கில் எழுந்தவை. இராமாயணம் ஒரு இலட்சிய சமுதாயத்தை காட்டுகின்றது; பாரதமோ சமுக சூழல்களை உள்ளதை உள்ளபடியே படம் பிடித்துக் காட்டுவதன் மூலம் தவறுகளை உணரச் செய்யும் நோக்கில் அமைந்தது. இரண்டும் சமுக சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டவையே. ஆனால் அவற்றை உணர்த்தும் வகையில் ஒன்றில் இருந்து மற்றொன்று வேறுபடுகின்றது.

இராமாயணத்தில் இராமன் கதைத் தலைவனாகிறான். சீதை கதைத் தலைவியாகிறாள். இவ்விருவரும் மிக் உயர்ந்த நிலையிலே நற்பண்புகள் பொருந்தப் பெற்ற நிலையிலே படைக்கப்பட்டுள்ளனர். இராமன் தாய், தந்தை சொற்கேட்கும் மகனாகவும், சிறந்த இலட்சிய அண்ணனாகவும், ஏகபத்தினி விரதனாகிய கணவனாகவும் சிறந்த வீரனாகவும் படைக்கப்பட்டான். கற்பிற் சிறந்த மங்கையர் திலகமாக்ச் சீதை சித்தரிக்கப்பட்டாள். இவர்களைப் போலவே சிறந்த தம்பியர்கள் படைக்கப்பட்டனர். பல நற்பண்புகள் இருந்தும் பெண்ணாசை உந்த ஒரு தீய பண்பால் அழிகின்றவனாக இரா

வண்ணன் அமைந்தான். இந்த இதிகாசத்திலே அறம் வெல்லும் பாவம் தோற்கும் எனும் கருத்து உள்ளிடு பொருளாக இருந்தது. இந்த இதிகாசத்தை வாசிக்கும் ஒருவர் அல்லது கேட்டுக்கொண்டிருக்கும் ஒருவர் இராமனும் சீதையும் போல இலட்சிய தம்பதிகளாய், இலக்குவன் பரதன்போல இலட்சிய தம்பதியராய் தம்மைக் கற்பனை செய்து கொள்வது தவிர்க்க முடியாதது. இவ்வகையில் பண்பட்டதொரு வாழ்க்கை முறையை இராமாயணம் போதிக்கிறது. வால்மீகி முனிவர் தாம் வாழ்ந்த சமுகத்தின் குறைபாடுகளை நோக்கி அக் குறைபாடுகள் பெரிதும் இல்லாத ஒரு இலட்சிய சமுதாயத்தை ஒரு இலட்சிய உலகத்தை இராமாயணம் மூலம் சிருஷ்டிக்கிறார். இவ்வகையில் அவரது கற்பனை வளம் மிக நன்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. ''தந்தை தாய் பேண்'' என்பதையோ பெண்களுக்குக் கற்பே அணிகலன் என்பதையோ தர்மசாஸ்திரங்கள் கூறியதை விட வால்மீகி முனிவர் மிக இலகுவாக மனதில் பதியக் கூடிய வகையில் கூறியுள்ளார். மேலும் இந்தியா எங்கணும், இந்தியாவுக்கு வெளியிலும் கூட இராமனுடைய கதை பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு அல்லது தழுவப்பட்டுப் பரந்துள்ளமை, இந்தியப் பண்பாட்டு வரலாற்றிலே இராமாயணம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றதென்பதை எடுத்துக் காட்டுகின்றது.

மகாபாரதம் வியாசரால் வட மொழியில் எழுதப்பட்டது. இது சந்திர வம்சத்திலே பிறந்த மன்னர் பரம்பரையின் கதை கூறுவது. இப் பரம்பரையில் தோன்றியோர்கட்கு இடையிலே அரசியல் சம்பந்தமாகவும், அழுக்காறு சம்பந்தமாகவும் பல உட்பூசல்கள் தோன்றுகின்றன. இவை ஒரு மாபெரும் யுத்தத்திலே ஏற்படும் போரழிவோடு முடிவடைகின்றன. இக்கதையம்சத்தை சுமார் ஒரு இலட்சம் சுலோகங்கள்கொண்ட பேரிலக்கியமாகக் கொள்வர். இந்த இதிகாசத்திலே அரசியல், போர், சுயம்வரம், திருமண முறைகள், வனவாசம், அஞ்ஞாதவாசம் போன்ற பல செய்திகள் விரிவாகக் கூறப்படுகின்றன. மகாபாரதம் எழுந்த காலம் ஏறக்குறைய இராமாயணகாலமே. சமுகத்தில் பல்வேறுவகைச் சூழல்களும் போட்டிகளும் நிலவியதொரு சூழ்நிலையில் அச்சமுகக் குறைபாடுகளைக் கண்டிக்கவேண்டிய சூழ்நிலை நிலவியது. வால்மீகியும் வியாசரும் சமுகத்தை நல்நெறிப் படுத்துவதற்காக இலக்கியம் படைக்க முயன்றனர். இவ்விருவரும் இலக்கியம் படைக்கும் கலைப் பண்பிலே வேறுபட்டனர். வால்மீகி முனிவர் ஒரு இலட்சிய சமுதாயத்தைப் படைத்துக் காட்ட, வியாச முனிவர் ஒரு யதார்த்த சமுதாயத்தைப் படைத்தார். ஒருவர் இப்படி இருந்தால் நல்லது என்றுகூறும்பொழுது, மற்றையவர் இப்படி இருக்கின்றது அதில் உள்ள தவறுகள் என்ன என்பதை எடுத்துக் காட்டுகிறார். சமுதாயம் தன்னைப் புரிந்துகொண்டு, தன்னைத்தான் திருத்திக் கொள்வதற்கு ஏற்றவகையில் பல்வேறு வகையான சூழ்ச்சி, வஞ்சகம், போட்டி, பொறாமை போன்ற பண்புகள் கொண்டனவும், யதார்த்தமானதுமான பாத்திரங்களை அவர்களது இயல்பான குணதோஷங்கள் புலப்படும் வண்ணம் படைத்துள்ளார். இவ் வித்தியாசங்களைப் படிப்போர், நடைமுறையில் தாம் காணும் சமுகத்தினைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அறம் ஒழுக்கம் என்பவற்றிற்கு உதாரணமாகத் திகழும் தருமபுத்திரன் கூடச் சில வேளைகளில் தவறு செய்வதும், பொறாமை, சூழ்ச்சி என்பவற்றிற்கு இலக்காகத் திகழும் துரியோதனன்கூடச் சில பண்புகளில் நல்லவனாகத் திகழ்வதும் சராசரி மனித இயல்பைக் காட்டுகின்றது. துரியோதனனின் நண்பன் என்ற வகையில் கர்ணன் தவறுகள் செய்பவனாகக் கருதப்படுகின்றான். செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதற்காக வீஷ்மர் போன்ற பெரியவர்கள் அதர்மவழியில் நடந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பாரதம் அறம், ஒழுக்கம் என்பவற்றை நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதில் ஏற்படும் கஷ்டங்களை யதார்த்தமாக எடுத்துக்காட்டும் ஒரு பண்பாட்டு இலக்கியமாக அமைகின்றது.

பாரதக் கதையிலே பீஷ்ம பருவத்திலே வரும் ஒரு உபநிடதமே ''பகவத் கீதை'' எனப்படுகின்றது. போர்க்களத்திலே கடமையைப் போதித்த ஒரு தத்துவநூலாக இக்கீதை அமைகின்றது. உறவினரையும், சுற்றத்தவரையும் வென்று ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமா? என அருச்சுனனுக்கு மனம் சலிப்படைகின்றது. இதனால் அருச்சுனன் காண்டீவத்தை நழுவவிட்டு போருக்குப் பின்வாங்குகின்றான். அவனைப் பற்றி இழுத்துத் தேரில் இருத்தி யுத்தத்தில் ஊக்கம் ஏற்படுமாறு உபதேசம் செய்கின்றான். இவ்வுபதேசமே ''பகவத்கீதை'' எனப்படுகின்றது. தர்மம், பக்தி, ஞானம் எனப்படுகின்ற மூவகை யோகங்களையும் மிக விரிவாக விளக்குகின்ற ஒரு பெரும் உப நிடதமாக ''கீதை'' விளங்குகின்றது.

இதிகாசங்கள் உலகியல் பாத்திரங்களைப் படைத்து கதை ரூபமாக அரிய தத்துவங்களை உணர்த்துபவை. இவ்வகையில் புராணங்கள் ஓரளவுக்கு வேறுபடுகின்றன. இவை உலகியல் கதைகளைக் கொண்டு அமைந்தாலும், தெய்வங்களின் அவதாரச் செய்திகளையும், உலகத் தோற்றம், உலக அழிவு போன்ற செய்திகளையும் பெருமளவு கொண்டனவாக அமைகின்றன. புராணங்கள் என்ற வகையிலே பதினெட்டு புராணங்களையும், அதேயளவு உப புராணங்களையும் கூறுவது மரபு. இவை தவிரத் தமிழிலுள்ள திருத்தொண்டர் புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம் முதலியவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

புராணக் கதைகள் அறக்கருத்துக்களுக்கும், வேள்வி, தவம், வழிபாட்டு முறைகள் என்பவற்றிற்கும் விரிவான விளக்கங்களைத் தருகின்றன. அத்துடன் சிறந்த உதாரணக் கதைகளையும் தாங்கியுள்ளன. உதாரணமாகத் தவத்தின் வல்லமையை விளக்கும் இடங்களில் விஸ்வாமித்திரர், அக்ஸ்தியர் போன்ற முனிவர்களின் கதைகள் அமைகின்றன. அகஸ்தியர் தம்முடைய தவ வல்லமையினால் விந்திய மலையைப் பாதாளத்தில் போகச் செய்ததும், பொதிமலையில் இருந்து பூமியைச் சமப்படுத்தியதும், இந்திரப் பதவியிலிருந்த நகுடனைப் பாம்பாகச் சபித்ததும், வாதாபியைச் சீரணித்ததும் அவரது தவ வலிமையைப் புலப்படுத்துபவையாகும். விஸ்வாமித்திரர் தன்னுடைய தவத்தின் வலிமையினால் திரிசங்குவைப் பூமியிலிருந்து உடலோடு சொர்க்கத்திற்கு அனுப்புகிறார். இந்த நிகழ்ச்சி தவத்தின் ஆற்றலிக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக அமைகின்றது.

உண்மைக்கு எப்பொழுதும் வெற்றியுண்டு. இதனை விளக்கும் வகையில் அமைந்ததுதான் அரிச்சந்திரன்கதை. மன்னனாகத் திகழ்ந்த அரிச்சந்திரன் உண்மை பேசுவதைத் தனது விரதமாகக் கொண்டு வாழ்ந்து வந்ததால் பற்பல இன்னல்கட்கு ஆளாக நேர்ந்தது. இறுதியில் உண்மையே அவனுக்கு வெற்றியையும் கொடுத்தது. இக்கதையின் மூலம் சத்யம் ''ஏவ ஜெயதே'' என்ற கருத்து வற்புறுத்தப்படுகின்றது.

புராணங்கள் தவத்தின் வலிமையைக் கூறுவதோடு வேள்விகள் முறைப்படி செய்யப்படவேண்டும் என்பதையும் வற்புறுத்துகின்றன. முறை தவறிச் செய்யப்படும் வேள்விகளால் ஏற்படும் தீமைகளைப் பற்றியும் இதிகாச, புராணங்கள் கூறுகின்றன. கந்தபுராணத்திலே வேள்வியின் வல்லமை சிறப்பாகக் கூறப்படுகின்றது. சூரபத்மன் வேள்விகள் பல செய்து இறுதியில் அவ் வேள்விக் குண்டத்தில் தன்னையே அர்ப்பணம் செய்து அழித்துக் கொள்கிறான். அதன் பெறுபேறாக இறைவன் தோன்றி அவனுக்கு மாபெரும் வரங்களைக் கொடுக்கிறான். அழியாத வைர உடம்பினையும் இறைவனிடமிருந்து பெறுகின்றான். அதைப் பெற்றுக் கொண்டு தவறான அறிவினால் தேவர்களைச் சிறையிட்டுத் துன்புறுத்திய வேளையிலே இறைவனே சூரனைக் கட்டுப்படுத்தியதைக் காணுகிறோம்.

இதிகாச புராணங்கள் இந்து சமய வரலாற்றிலும் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தின. வேத காலத்தில் முதன்மை பெற்றிருந்த இந்திரன், அக்னி முதலிய தெய்

வங்கள் பிற்தள்ளப்பட்டு சிவன், விஷ்ணு ஆகிய தெய்வங்கள் முதன்மை பெறுவதை இதிகாச புராணங்களில் காணலாம். இதனை இந்து சமய வரலாற்றிலே ஒரு புரட்சி எனக் கூறலாம். வேதகாலக் கடவுட்கோட்பாடு வேதகால இறுதியில் ஒருமைக்கோட்பாடாக மாறி உப நிடதங்களிலே பிரமம் ஆகக் காட்சியளித்தது. இது இதிகாச புராண காலத்திலே சிவன், விஷ்ணுவாகப் பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது.

இவ்விரு தெய்வங்களும் இன்றைய நிலையில் சர்வ வல்லமையுடையனவாகக் கொள்ளப்படுகின்றன. உலகைப் படைத்து, காத்து, அருளி, மறைத்து, அழிக்கின்றவனாகச் சிவன் விளங்குகின்றான் எனச் சைவ சமயத்தினர் நம்புகின்றனர். இதேபோல் இவ்வாறான தொழில்களை விஷ்ணு செய்கின்றான் என வைணவ சமயத்தினர் நம்புகின்றனர். அத்துடன் உலகைக் காத்தற் பொருட்டு விஷ்ணு அடிக்கடி அவதாரம் எடுக்கின்றார் எனவும் வைணவ சமயத்தினர் நம்புகின்றனர்.

எனவே ஒரு கால கட்டத்திலே சமயத்தைப் பொது மக்கள் வாழ்வுடன் இணைக்க முயன்ற வேளையிலே பொது மக்களுக்கு விளங்கக் கூடிய எளிய நடையிலே விரும்பக்கூடிய சுவையான கதை மூலமாகத் திட்டமிட்டுச் சுவை பொருந்தச் செய்யப்பட்டவையே இதிகாச புராணங்கள்.

(உதவி விரிவுரையாளர்
தமிழ்த்துறை - யாழ் வளாகம்)

எதிர்பாருங்கள் அடுத்த அலையில்........

திருமதி. கலையரசி சின்னையா B.A. (Hons), M. A எழுதும்
“பாரதியாரும் கண்ணன் பாட்டும்”

திரு. வே. யுகபாலசிங்கம் B. A. (Hons) எழுதும்
“அளவையியலும் சில தவறான கற்பிதங்களும்”

# தேசிய வருமானமும் கணிப்பீட்டு முறைகளும்.

சி. வரதராஜன் B.A (HONS)

உதவிவிரிவுரையாளர். பொருளியற்றுறை


பேராதனை வளாகம்

தேசிய வருமானம் என்பது ஒருநாட்டில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில், அநேகமாக் ஒரு வருட காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பணரீதியான பெறுமதியைக் குறிக்கின்றது. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் மக்கள் பொருட்களை மட்டுமின்றி கல்விச் சேவை, சுகாதாரச்சேவை, போன்ற சேவைகளையும் நுகர்கின்றார்கள். எனவே பொருள் உற்பத்தி மட்டுமன்றி சேவைத்துறை உற்பத்திகளும் மக்களின் நுகர்விற்காக நடைபெறுகின்றது. எனவேதான் தேசிய வருமானம் தனித்து பொருளுற்பத்தியை மட்டுமடக்காது சேவைத் துறைகளின் உற்பத்தியையும் உள்ளடக்குகின்றது. இத்தகைய பொருட்கள் சேவைகளின் பணரீதியான மதிப்பீடே தேசிய வருமானக் கணப்பீட்டில் சேர்க்கப் படுகின்றது. பொருட்களின் பௌதிகரீதியான பெறுமதிகள் வெவ்வேறு அளவுகோள்கள் கொண்டு மதிப்பிடப்படுதற்கு உ+மாக அந்தர், யார், கலன், போன்ற வேறுபட்ட அளவு கோள்களில் அவை மதிப்பிடபடுவதனால் அவற்றினை நாம் ஒன்று சேர்த்துக் கணிப்பிடமுடியாது. ஆனால் பணம் என்ற பொதுவான அளவுகோள் கொண்டு பொருட்களை மதிப்பீடு செய்யும் போது இத்தகைய பிரச்சனை எழுவதில்லை. மேலும் தேசிய வருமானத்தைப் பணரீதியாகக் கணிப்பிடும்போதே ஏனைய நாட்டுத் தேசிய வருமானங்களோடு அவற்றை ஒப்பிடமுடிகின்றது. ஏனெனில் பணம் என்பது சர்வ தேசரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பொது மதிப்பீட்டு அலகாகும்.

தேசிய வருமானக் கணிப்பீடுகள் பொதுவாக மூன்று முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது. ஒரு குறிப்பிட்டகாலப்பகுயில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்தப் பொருட்கள் சேவைகளின் பணரீதியான பெறுமதி என்பது முதலாவது முறையாகவும், ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் ஒரு நாட்டில் உற்பத்தியில் ஈடுபட்ட உற்பத்திக்காரணிகளுக்குக் கிடைத்த வருமானம் என்பது இரண்டாவது முறையாகவும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகள் மீதான செலவீடு என்பது மூன்றுவது முறையாகவும் விளங்குகின்றன. இத்தகைய கணிப்பீட்டு முறைகளே முறையே உற்பத்திவழி, வருமானவழி, செலவீட்டு வழியிலான தேசிய வருமானக் கணிப்பீடுகள் என அழைக்கப்படுகின்றன.

ஒரு நாட்டின் தேசிய வருமானம் உற்பத்திவழி, வருமானவழி, செலவீட்டுவழி ஆகிய மூன்று வழிகளில் கணிக்கப்பட்டாலுங்கூட இம் மூன்று வழிகளினுலும் கணிக்கப்படும் தேசிய வருமானம் புள்ளிவிபரப்படி ஒன்றுக் கொன்று சமனுகவே எப்போதும் இருக்கும். உற்பத்தி வழியிலான தேசிய வருமானக் கணிப்பீடு மொத்தத் தேசிய உற்பத்தி எனவும், வருமான முறையில் கணிக்கப்படும் தேசிய வருமானம் மொத்தத் தேசிய வருமானமெனவும், செலவீட்டுவழியிலான தேசிய வருமானக் கணிப்பீடு மொத்தத் தேசிய செலவீடு எனவும் அழைக்கப்படுகின்றன.

ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்தப் பொருட்கள் சேவைகளின் பணரீதியான பெறுமதியே உற்பத்திவழியில் கணிக்கப்படும் மொத்தத் தேசிய உற்பத்தியாகும். ஒரு குறிப்பிட்ட காலபகுதியில் ஒரு நாட்டில் பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்ட உற்பத்திக் காரணிகள் பெற்ற வருமானத் தொகையே வருமான வழியிலான மொத்தத் தேசிய வருமானம் எனப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் மீது ஏற்படும் செலவுகளின் தொகையே செல்வீட்டு முறையிலான மொத்தத் தேசியச் செலவாகும். ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு நாட்டில் உற்பத்தியில் ஈடுபட்ட உற்பத்திகாரணிகள் தாம் உற்பத்தி செய்தனவற்றையே தமது வருமானமாகப் பெற முடியும். தாம் வருமானமாகப் பெற்றவற்றையே செலவு செய்ய முடியும். எனவே மொத்தத் தேசிய உற்பத்தி மொத்தத் தேசிய வருமானம் மொத்தத் தேசியச் செலவு என்பன எப்போதும் ஒன்றுக்கொன்று கோட்பாட்டு ரீதியாகச்சமனுக்கவே இருக்கும்.




அரசாங்கத்துறையற்ற, வெளிநாட்டுத் துறையற்ற ஒரு மூடப்பட்ட அல்லது அடைபட்ட பொருளாதாரம் ஒன்றினை எமது ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோமாயின் அங்கு வீட்டுத்துறை அல்லது நுகர்வுத்துறை, நிறுவனத்துறை அல்லது உற்பத்தித்துறை என்ற இரண்டு துறைகள் இருப்பதனைக் காணலாம். இவற்றில் வீட்டுத்துறை உற்பத்திக் காரணிகளைக் கொண்டிருக்கும் துறையாகவும் உற்பத்தித்துறை அவ்வுற்பத்திக் காரணிகளை இணைத்து உற்பதியில் ஈடுபடும் துறையாகவும் காணப்படுகின்றது. இந்நிலையில் உற்பத்தித்துறை வீட்டுத் துறையிடமிருந்து நிலம், உழைப்பு முதல், என்ற உற்பத்திக் காரணிகளைக் கொள்வனவு செய்கின்றது. இதற்குப்பதிலாக வாடகை, கூலி, வட்டி என்ற வருமானங்களை உற்பத்தித்துறை வீட்டுத் துறைதுக்கு வழங்குகின்றது இவ்வகையில் வழங்மப்படும் வருமானங்களின் கூட்டுத் தொகையே வருமானவழியிலான மொத்தத் தேசிய வருமானம் எனப்படும். உற்பத்தித் துறை தாம் பெற்ற உற்பத்திக் காரணிகளை உற்பத்தியில் ஈடுபடுத்தி பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்கின்றது இவ்வகையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பணரீதியான பெறுமதியே உற்பத்தி வழியிலான மொத்தத் தேசிய உற்பத்தி எனப்படுகின்றது. உற்பத்தித் துறையினல் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகள் வீட்டுத்துறையினரின் நுகர்விற்காகக் கொள்வனவு செய்யப்படுகின்றன. வீட்டுத் துறையினர் தாம் பெற்ற வருமானங்களை இந்நுகர்விற்காகச் செலவிடுகின்றர். இவ்வாறு செலவிடப்படும் தொகையினடப்படையில் கணிப்பதே செல

வீட்டுவழியிலான மொத்தத் தேசியச் செலவாகும். வீட்டுத்துறையினரின் வருமானம் அவர்கள் உற்பத்தித்துறைக்கு வழங்குகின்ற உற்பத்திக்காரணிகளின் அளவு, தரம் என்பவற்றில் தங்கியுள்ளது. உற்பத்தித்துறையினர் எவ்வளவு உற்பத்தி செய்வதென்பது அவர்கள் வீட்டுத்துறையிடமிருந்து பெறுகின்ற உற்பத்திக் காரணிகளின் அளவு தரம் என்பதில் தங்கியுள்ளது. எனவே மொத்தத் தேசிய வருமானமும், மொத்தத் தேசிய உற்பத்தியும் சமம். வீட்டுத்துறையினரின் செலவீடுகள் அவர்களின் வருமானத்தில் தங்கியுள்ளது. எனவே மொத்தத் தேசிய வருமானமும் மொத்தத் தேசிய செலவீடும் சமம். வீட்டுத்துறையினர் தாம் உற்பத்தித் துறையினரிடமிருந்து கொள்வனவு செய்கின்ற பொருட்கள் சேவைகளின் பெறுமதிக்கேற்பவே செலவு செய்வர் எனவே மொத்தத் தேசிய செலவும் மொத்தத் தேசிய உற்பத்தியும் சமம். இந்நிலையில் மொத்தத் தேசிய உற்பத்தி மொத்தத் தேசிய வருமானம், மொத்தத் தேசியச் செலவு என்பன ஒன்றுக் கொன்று சமனுவதைக் காண முடிகின்றது.

இவ்வகையில் தேசிய வருமானத்தை மூன்று வழிகளில் கணிப்பிடலாம். என்றும் இம்மூன்று வழிகளினுல் கணிக்கப்படும் தேசிய வருமானத்தொகை ஒரேயளவின தாக அமையும் என்றும் கூறும்போது இம்முறைகளில் எந்த முறையினை ஒரு நாடு தனது தேசிய வருமானத்தைக் கணிப்பிடுவதற்குத் தெரிவு செய்யலாம் அல்லது பயன்படுத்தலாம் என்பது பல விடயங்களில் தங்கியுள்ளது. ஒருநாடு தேசிய வருமான மதிப்பீட்டினை மேற்கொள்ளும் போது என்னென்ன காரணங்களுக்காக, அதாவது என்னென்ன விடயங்களை தேசிய மதிப்பீட்டிலிருந்து அறிந்து கொள்ள விரும்புகின்றதோ அதற்கேற்ப தெரிவு செய்கின்ற முறைகளும் வேறுபடலாம். உதாரணமாக ஒரு நாட்டினது உற்பத்தியமைப்பினை அதாவது ஒரு குறிப்பிட்ட காலத்தில் எவ்வெத்துறையிலிருந்து எவ்வளவு உற்பத்தி கிடைக்கின்றன என்றறிவதே தேசியவருமானக் கணிப்பீட்டின் நோக்கமாயின் அந்நாடு உற்பத்திவழியிலான தேசிய வருமான மதிப்பீட்டினையே மேற்கொள்ளும். இதேபோன்றே நாட்டின் வருமான அமைப்பு, நாட்டின் செலவீட்டடமைப்புப் போன்ற விடயங்களை அறிய வேண்டுமாயின் அதற்கேற்ப தேசிய வருமானத்தைக் கணிப்பிடுவதற்கு தெரிவு செய்யப்படும் முறைகளும் வேறுபடுகின்றன. மேலும் கிடைக்கின்ற அல்லது கிடைக்கக்கூடிய புள்ளிவிபரங்களின் அளவு தரம் என்பவற்றினைப் பொறுத்தும் தேசிய வருமானத்தை மதிப்பிடுவதற்குக் கையாளப்படும் முறைகள் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. உதாரணமாக ஒருநாட்டிலே உற்பத்தி தொடர்பான புள்ளிவிபரங்களைப் பெறுவது கடினமாக இருக்குமாயின் அல்லது கிடைக்கின்ற புள்ளிவிபரங்கள் நம்பத்தகுந்தவையாக அல்லது உண்மையானவையாக் இருக்க முடியாத நிலை ஏற்படுமாயின் அந்நாடு உற்பத்திமுறை தவிர்ந்த ஏனைய முறைகளில் தேசியவருமான மதிப்பீட்டினை மேற்கொள்ளலாம்.

உற்பத்திவழியிலான தேசியவருமான மதிப்பீட்டினை நாம் முதலில் கவனத்திற்கெடுத்தால் குறிப்பிட்ட ஒரு ஆண்டுகாலப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பணரீதியான பெறுமதி என அதனைக்கூறலாம். இவ்வாறு உற்பத்தி வழியாக் நோக்கும்போது உற்பத்தி செய்யப்பட்ட எல்லாப் பொருட்கள் சேவைகளின் பெறுமதிகளையும் சேர்த்துக் கொள்ளல் தவருனதாகும். ஏனெனில் பொருட்கள், சேவைகளின் உற்பத்திக்காக பலவகையான மூலப்பொருட்கள், இடைப் பொருட்கள் பயன்படுகின்றன. இத்தகைய பொருட்களின் பெறுமதிகளையும் இத்தகைய பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பொருட்களின் பெறுமதியையும் ஒன்ருகச் சேர்ப்போமாயின் இரண்டு கணிப்பிடுதல் என்ற பிரச்சனை ஏற்படுகின்றது. உதாரணமாக மேசை என்ற ஒரு உற்பத்திப் பொருளை எடுத்துக் கொண்டால் அந்த மேசையின் பெறுமதி தேசியவருமானக் கணிப்பீட்டில் சேர்க்கப்படுகின்றது. அவ்வகையில் அம்மேசையின் பெறுமதி 400/- ரூபா என எடுத்துக் கொன்

வோம். 400/- பெறுமதியான மேசையினைச் செய்ய மரம் என்ற ஒரு மூலப்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அம்மரத்தின் பெறுமதி 150/- ரூபாவாக இருக்கலாம். இம்மரம் மேசையாவதற்கு முன்பு பலகை என்ற வடிவத்தினைப் பெறுகின்றது. இப்பலகையின் பெறுமதி 250/- ரூபாவாக இருக்கலாம். இந்நிலையில் 400/- பெறுமதியான மேசையின் பெறுமதிக்குள் பலகையின் பெறுமதியான 250/- ரூபாவுக்குள் மரத்தின் பெறுமதியாகிய 150/- அடங்கியுள்ளது. இப்போது நாம் தேசியவருமானத்தைக் கணிப்பிடும்போது மேசையின் பெறுமதியோடு மரத்தின் பெறுமதியினையும், பலகையின் பெறுமதியினையும் ஒன்றுகச் சேர்த்துக் கணிப்போமாயின் அங்கு மரம் பலகை போன்ற மூலப்பொருள், இடைப்பொருள் என்பவற்றின் பெறுமதிகள் இரண்டுமுறை கணிப்பிடப்படுகின்றன. இதுவே தேசிய வருமானக் கணிப்பீட்டில் இடம்பெறுகின்ற ''இரட்டைக் கணிப்பீட்டுப் பிரச்சனை'' எனப்படுகின்றது. இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இரண்டு வழிமுறைகளைக் கையாளலாம். ஒன்று மூலப்பொருட்கள் இடைப்பொருட்கள் என்பவற்றின் பெறுமதியினை நீக்கிவிட்டு இறுதியாக உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் பெறுமதியினை மட்டும் தேசிய வருமானக் கணிப்பீட்டில் சேர்த்தல் அதாவது மரம், பலகை என்பவற்றின் பெறுமதிகளை நீக்கி மேசையின் பெறுமதியை மட்டும் தேசிய வருமானக் கணிப்பீட்டைச் சேர்த்தல். இரண்டாவது, மூலப்பொருட்கள் இடைப் பொருட்கள் என்பவற்றின் பெறுமதியினையும் சேர்க்க வேண்டுமெனக் கருதினுல் அவற்றின் தனித்தனிப் பெறுமதிகளைக் கண்டு அவற்றினைத் தேசிய வருமானக்கணிப்பீட்டில் சேர்த்தல் உதாரணமாக மரத்தினதும், பலகையினதும், மேசையினதும் தனித்தனிப் பெறுமதிகளைக் கணித்து அவற்றினைத் தேசிய வருமானக் கணிப்பீட்டில் சேர்த்தல். இவ்விடயங்களை நாம் கவனத்திற் கொள்வோமாயின் உற்பத்திவழியிலான தேசிய வருமானம் என்பதற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கொடுக்க முடிகின்றது. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பொருட்கள், சேவைகளின் பணரீதியான பெறுமதியே மொத்தத் தேசிய உற்பத்தியாகும்.

உற்பத்திவழியிலான தேசிய வருமானம் என்ற விடயத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மொத்தத் தேசிய உற்பத்தி என்ற இரு கருத்துக்கள் முக்கிய இடம் பெறுகின்றன. குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பொருட்கள், சேவைகளின் பணரீதியான பெறுமதியே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும் ஒரு நாட்டின் உற்பத்தியில் அந்த நாட்டுக்குச் சொந்தமான உற்பத்திக் காரணிகள் ஈடுபடுத்தப்படுகின்றன. அதேவேளையில் அவ்வுற்பத்தியில் வெளிநாட்டுக்குச் சொந்தமான, ஆனுல் அந்நாட்டில் வதிகின்ற உற்பத்திக் காரணிகளும் பங்கேற்கலாம். குறிப்பிட்ட ஒரு நாட்டின் உற்பத்திக் காரணிகள் அந்நாட்டிலே மேற்கொள்ளும் உற்பத்திகள், அந்த நாட்டிற்கே சொந்தமானவை. ஆனுல் ஒரு நாட்டின் உற்பத்தியில் வெளிநாட்டுக் காரணிகள் பங்கு கொள்ளுமாயின் அவ்வெளிநாட்டுக் காரணிகளின் உற்பத்திகள் அந்தநாட்டிற்குச் சொந்தமானவையல்ல! ஏனெனில் அவ்வெளிநாட்டு உற்பத்திக் காரணிகள் தமது உற்பத்திச் சேவைகளை வழங்கியதன் மூலம் பெறுகின்ற வெருமதிகளை தமது தாய் நாட்டிற்கே அனுப்புகின்றனர். எனவே ஒரு நாட்டின் உள்நாட்டுப்பத்தியில் வெளிநாட்டு உற்பத்திக் காரணிகள் ஈடுபடுத்தப்படுமாயின் அவ்வுள்நாட்டு உற்பத்தியில் ஒருபகுதி வெளிநாட்டிற்கு வெளியேறுகின்றது. உதாரணமாக இலங்கையில் பாகிஸ்தானிய வங்கியாகிய ஹபிப் வங்கி (HABIB BANK) தனி கிளை ஒன்றினை அமைத்து வங்கித் தொழில் நடத்தி வருகின்றது. இந்நிலையில் இலங்கையின் உள்நாட்டு உற்பத்தியில் இப்பாகிஸ்தானிய வங்கியின் உற்பத்தியும் உள்ளடக்கப் படுகின்றது. ஆனுல் இப்பாகிஸ்தானிய வங்கி தனது தொழிலின் மூலம் கிடைக்கின்ற வருமானங்களைத் தமது தாய் நாடான பாகிஸ்தானுக்கு அனுப்புகின்

றது. எனவே மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒருபகுதி பாகிஸ்தானுக்கு அனுப்பப்படுகின்றது. இதுவே வெளிநாட்டுக்குச் செல்லும் காரணி வருமானம் என அழைக்கப்படுகின்றது. இவ்வகையில் வெளிநாட்டுக்குச் செல்லும் அல்லது அனுப்பப்படும் காரணி வருமானம் எமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்க்கப்பட்டிருந்தாலுங்கூட அது உண்மையில் எமக்குச் சொந்தமான அல்லது எமக்குக் கிடைக்கின்ற உற்பத்தியல்ல! எனவே இவ்வகையில் வெளிநாட்டுக்கு வெளியேறுகின்ற அல்லது அனுப்பப்படுகின்ற காரணி வருமானங்களை எமது மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து நீக்கவேண்டும் அப்போது தான் எமக்கு உண்மையாகவே கிடைக்கின்ற உற்பத்தியினைப் பெற முடியும்.

வெளிநாட்டுக் காரணிகள் குறிப்பிட்ட ஒரு நாட்டின் உற்பத்தியில் ஈடுபடுவது போன்றே குறிப்பிட்ட அந்த நாட்டிற்குச் சொந்தமான உற்பத்திக் காரணிக்ள் வெளிநாடுகளில் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கலாம். இவ்வாறு வெளிநாடுகளில் உற்பத்தியில் ஈடுபடுகின்ற, குறிப்பிட்ட அந்நாட்டிற்குச் சொந்தமான உற்பத்திக் காரணிகள் வெளிநாடுகளில் உற்பத்தியில் ஈடுபடுவதன் மூலம் தாம் பெறுகின்ற வருமானங்களை குறிப்பிட்ட அந்நாட்டிற்கு அனுப்புகின்றன இவ்வாறு அனுப்பப்படும் வருமானங்கள் உள்நாட்டுக்கு வரும் காரணி வருமானங்கள் எனப்படுகின்றன. உதாரணமாக இலங்கை வங்கி தனது கிளை ஒன்றினை லண்டனில் அமைத்து வங்கித் தொழிலை அங்கு நடத்துகின்றது. இந்நிலையில் இங்கிலாந்தின மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இலங்கை வங்கிக் கிளையின் உற்பத்தியும் உள்ளடக்கப்படுகின்றது. ஆனல் இவ்வுற்பத்தி இலங்கையின் மொத்த உள்நாட்டு மொத்த உற்பத்தியில் சேர்க்கப்படுவதில்லை. ஏனெனில் மொத்த உள்நாட்டு உற்பத்தியென்பது உள்நாட்டிலே உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்தியைக் குறிப்பதாகும். அதேவேளையில் இலண்டனில் உள்ள இலங்கைக் வங்கிகிளை அங்கு நயம் பெறுகின்ற வருமானங்களை அல்லது இலாபங்களை இலங்கைக்கு அனுப்புகின்றது. இவ்வருமானங்கள் இலங்கைக்குச்சொந்தமானது அல்லது இலங்கையின் உற்பத்தியில் சேர்க்கப்பட வேண்டியது. எனவே வெளிநாட்டிலிருந்து உள்நாட்டிற்கு வருகின்ற காரணி வருமானங்களை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்க்கவேண்டும்.

இவ்விளக்கத்தில் இரண்டு வகையான காரணி வருமானங்கள் காணப்படுகின்றன ஒன்று வெளிநாட்டுக்குச் செல்லும் காரணி வருமானம், இரண்டு உள்நாட்டிற்கு வரும் காரணிவருமானம் இக்காரணிவருமானங்கள் ஏற்றுமதி, இறக்குமதியினுல் பெறப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும் இவ்விருவகையான காரணிவருமானங்களியிருந்து தேறிய காரணிவருமானம் என்ற ஒன்றினைப் பெறமுடிகின்றது. வெளி நாட்டுக்கு அனுப்பப்படும் காரணிவருமானத்தை உள்நாட்டுக்கு வரும் காரணிவருமானத்திலிருந்து கழிப்பதன் மூலம் தேறிய காரணி வருமானத்தைப்பெற முடிகின்றது. இத்தேறியகாரணிவருமானம் நேர்க்கணியப் பெறுமானத்தையோ அன்றி எதிர்க்கணியப் பெறுமானத்தையோ பெறமுடியும். வெளிநாட்டுக்கனுப்பம்படும் காரணிவருமானத்திலும் பார்க்க உள்நாட்டுக்கு வரும் காணிவருமானம் அதிகமாக இருப்பின் தேறிய காரணி வருமானம் நேர்க்கணியப் பெறுமானத்தைக் கொண்டிருக்கும் மாருக வெளிநாட்டுக்கனுப்பப்படும் காரணி வருமானத்திலும் பார்க்க உன்நாட்டுக்கு வரும் காரணிவருமானம் குறைவாக இருப்பின் தேறிய காரணி வருமானம் எதிர்க்கணியப் பெறுமானத்தை கொண்டிருக்கும்.

| | நேர் | எதிர் |
|---|---|---|
| உள்நாட்டுக்குவரும் காரணிவருமானம் | 1000/= | 600/= |
| வெளிநாட்டிற்கனிப்படும் காரணிவருமானம் | 600/= | 1000/= |
| தேறிய காரணிவருமானம் | 400/= | 400/= |

## கவிதை இலக்கியத்தில்

# கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

*செல்வி சீ. கணபதிப்பிள்ளை B: A. (Hons.)*

உதவி விரிவுரையாளர் பேராதனை வளாகம்,

தமிழ் மறுமலர்ச்சிக் கவிஞரான பாரதியின் படைப்புக்கள் கவிதை இலக்கியத்தில் ‘பாரதியுகம்’ எனவொரு புதிய யுகத்தைத் தோற்றுவித்தன. பொருள், வடிவம், நடை ஆகிய மூன்று துறைகளிலும் பாரதி புதுமையைப் புகுத்தியுள்ளார். பாரதி காட்டிய வழியிற் சென்று பாக்கள் இயற்றிய புலவர்களுட் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையும் ஒருவர். பாரதியாரைப் பின்பற்றிக் கவிமணியும் எளிய பதங்களையும், கும்மி, சிந்து முதலிய எளிய யாபபு வகைகளையும் கையாண்டார்.

1876 ம் ஆண்டிலே தோன்றி 1954-ம் ஆண்டில் மறைந்தவரான கவிமணியியற்றிய சிறு கவிதைகள் மலரும மாலையும் என்ற நூல் வடிவமாக வெளிவந்துள்ளன. அவர் இயற்றிய நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் என்பது ஒரு நீண்ட நூல்வடிவமாக உள்ளது. கவிமணி தனது பாடல்களிலே சாதிப் பிரிவினை, பெண்கள் பெருமை. பஞ்சம், பசிக்கொடுமை, வேலையில்லாத் திண்டாட்டம், சமூகச் சீர்திருத்தம், தேசியம் முதலியவற்றைப் பொருளாகக் கொண்டுள்ளார். இவற்றைவிட ஆங்கில மொழியிலுள்ள இயற்கைப் பொருள்களையும், இயற்கைக் காட்சிகளையும் பொருளாகக் கொண்ட சிறிய பாடல் வகைகளைத் தழுவிக் கவிமணி கவிதை புனைந்துள்ளார்.

கவிமணியின் கவிதைகளிலே இனிமை, எளிமை, தாயுள்ளம், ஆழ்ந்த கவனிப்பு, கருணை, இரக்கம் முதலிய பண்புகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

கவிமணியைப்பற்றிப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் கூறும் கூற்று இங்கு நோக்கத்தக்கது. “கவிமணியிடத்திலே அமைதி, பொறுமை, அடக்கம், இனிய மனப்பண்பு, இரக்கம், உபகாரசிந்தை, முறைமையிலே பிரியம், நினைவாற்றல் முதலியவற்றைக் காணலாம். நீண்ட காலமாகப் பெண்கள் கலாசாலையில் ஆசிரியராயிருந்தமையால் இக்குணங்கள் சிறந்து விளங்குவதற்கும் இடமிருந்தது. ஆவேசம், பரபரப்பு முதலியன சிறிதளவும் கிடையாது.” பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் கூற்றுக்கிணங்க கவிமணியின் கவிதைகளிலே பாரதியாரின் கவிதைகளிலே காணப்படும் வேகம், கோபம், விறுவிறுப்பு, ஆவேசம் முதலிய குணங்களைக் காண முடியாதிருக்கின்றது.

கவிமணி தனது பாடல்களில் அதிக சீர்திருத்தக் கருத்துக்களைக் கூறியுள்ளார். இதனால் சமுதாய சீர்திருத்த நோக்குடன் சமூகத்தை முன்னேற்ற முயன்ற இரானடேயை ஒத்தவர் என்று கவிமணி போற்றப்படுகின்றார். தீண்டாதார் விண்ணப்பம், ஹரிஜனர்க்காக வருந்துதல், பெண்களின் உரிமைகள், ஒற்றுமையே உயர்நிலை ஆகிய இவரது பாடல்கள் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டனவாக விளங்குகின்றன. தீண்டாதார் விண்ணப்பம் என்ற தலைப்பில் வரும் பாடல்களைப் படிக்கும்பொழுது தீண்டாதவரென ஒதுக்கப்பட்டோரின் இரக்கத்திற்குரிய நிலையினை இரக்கமேற படக்கூடிய வகையில் கவிமணி எடுத்துக் கூறியுள்ளார்.

''உள்ளத் துள்ளது கவிதை—இன்ப
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை
தெரிந்துரைப்பது கவிதை''

என்று கவிதை பற்றிக் கூறிய கவிமணி உண்மை தெரிந் துரைப்பது ''கவிதை'' என்பதற்கேற்பத் தீண்டாதாரின் உண்மை நிலையினைத் தான் உணர்ந்த படியே கூறியுள்ளார்.

''காப்பாற்றி நமையாளும் கடவுளரும்
நமக்குள்ளே
பார்ப்பார்கள் பறையரென்ற பகுப்பேதும்
வைப்பதுண்டோ''

என்றுதீண்டாதார் நிலையிலிருந்து கவிமணி சமூகத்தினரை வினவுகின்றார் கோவிலுக்கு நாம் சென்றால் அங்கு தீட்டுக் குடிகொண்டுவிடுமா, கங்கையிலே நீராடினால் எமது பாவம் அங்கு படர்ந்துவிடுமா. தம்மைப் பெற்றவரைக் காணவிடாது பிள்ளைகளைத் தடுப்பவரும் உண்டா என்று தீண்டாதார் நிலையில்நின்று கவிமணி விடுக்கும் இரக்கம் நிறைந்த கேள்விகள்மூலம் அவர் தனது சீர்திருத்தக் கருத்தினைத் தனது சீர்திருத்த எண்ணத்தினை நன்கு புலப்படுத்துகின்றார். இவ்வாறுகச் சீர்திருத்தக் கருத்துக்களை அழகான முறையில் எடுத்துரைத்த போதும் உணர்ச்சி வேகத்தை இவர், பாடல்களில் வெளிப்படுத்தவில்லை. கருததுச் சிறப்பினைத்தான் பாடல்களிற் காணலாம். ஹரிஜனர்க்காக வருத்துதல் என்ற பாடலில் கவிமணி,

''உண்ணீர் விரும்பி வீட்டை
நண்ணி ஒருவன் நின்று
கண்ணீர் விடினும் செம்பில்
தண்ணீர் அளித்திடாத
இந்தப் பிறப்பு வேண்டாம்—இது வொழிய
எந்தப் பிறப்பும் வரட்டும்''

என்று பாடும்பொழுது உணர்ச்சி வேகத்தினைக் காண முடியவில்லை.

''ஏழையென்றும் அடிமையென்றும்
எவனுமில்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்ப
திந்தியாவில் இல்லையே''

என்ற பாரதியின் வேகத்தை இவர் பாடல்களிலே காணமுடியாது.

சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துரைத்த கவிமணி ஏழைமக்களின் துன்ப வாழ்வினையும், தொழிலாளர் துன்பத்தினையும் எடுத்துக் கூறுகின்றார். ஏழைச் சிறுமியரின் துயர்நிலையைப் பாடும்போது கவிமணி அவர்களின் துன்ப நிலையினை அழகாக எடுத்துக் கூறியிருத்தலைக் காணலாம்.

''நல்ல பண்டங்களைக் கண்டறியோம்
நாளும் வயிறுர உண்டறியோம்
அல்லும் பகலும் அலைந்திடுவோம்—பசி
ஆற வழியின்றி வாடிடுவோம்''

என்று ஏழைச் சிறுமியரையும் அவர்பாட வைப்பதைக் கேட்கும்போது இரக்க உணர்வு ஏற்படுகின்றது.

'இயற்கை வாழ்வு' என்ற பாடல் புலவன் ஒருவன் சோலையில் படுத்திருக்கும்போது அங்கு தங்கியிருக்கும் பறவைகள் ஆனந்தமாய்ப் பாடிக்கொண்டிருப்பதைக் கண்டு சில எண்ணங்கள் எழப் பாடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

'பறந்து பறந்தெங்கும்—திரியும்
பறவை வாழ்வினைப் போல்
சிறந்த வாழ்வேதும்—இந்தச்
செகத்தில கண்ட துண்டோ''

என்று தொடங்கிய கவிமணி, அங்கு சாதிச் சண்டையில்லை, சமயச் சண்டையில்லை என்று அப்பறவை வாழ்வின் சிறப்பினை அடுக்கிக் கூறிச் செல்கின்றார். பறவைகள் ஒற்றுமையாக வாழ்கின்றனவே. மனிதனிடம் இவ்வொற்றுமை இல்லை என்பதைத் தான் கவிமணி இப்பாடலால் உணர்த்த முயன்றாரெனினும், அவ்வுணர்ச்சியனுபவம் இங்கு சிறப்பாக வெளிப்படுத்தப் படவில்லையென்றே கூறவேண்டும். புறாக்கள் ஒன்றுக இருந்து இரையுண்டதைக் கண்டு பாரதிதாசன் பாடிய பாடலுடன் கவிமணியின் பாடலை ஒப்பிட்டுப் பார்க்கையில் எவ்வளவுதூரம் கவிமணியின் இப் பாடல் உணர்ச்சியனுபவத்தை வெளிப்படுத்துவதில் சிறப்புறவில்லை யென்பது நன்கு புலனாகும்.

"இட்டதோர் தாமரைப்பூ இதழ்விரித்
திருத்தல் போல
வட்டமாய்ப் புருக்கள்கூடி இரையுண்ணும்
அவற்றின் வாழ்வில்
வெட்டில்லைக் குத்துமில்லை வேறு வேறிருந்
துண்ணும்
கட்டில்லைக் கீழ்மே லென்னும் கண்மூடி
வழக்கமில்லை"

என்பது பாரதிதாசன் பாட்டு. பாரதிதாசனிடம் காணப்படும் உணர்ச்சி வேகம் கவிமணியிடம் காணப்படவில்லை

பெண்களைப்பற்றிப் பாரதியார் பாடியதைப் பின்பற்றிக் கவிமணியும் பாடியுள்ளார். ஆனல் பாரதியாரிடம் காணப்படும் உணர்ச்சி வேகம, துடிப்பு கவிமணியிடம் காணப்படவில்லை, பெண்களின் உரிமைகளைப்பற்றி கவிமணி.

"மங்கையராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவஞ் செய்திடவேண்டும் அம்மா!
பங்கயக் கைநலம் பார்த்தலவோ—இந்தப்
பாரில் அறங்கள் வளரும் அம்மா!

அல்லும் பகலும் உழைப்பவர் ஆர்?—உள்ளத்து
அன்பு ததும்பி எழுபவர் ஆர்?
கல்லும் கனியக் கசிந்துருகித்—தெய்வ
கற்பனை வேண்டித் தொழுபவர் ஆர்?"

என்று கூறுகின்ருர். இங்கு பெண்களின் பெருமைகளை வரிசைக் கிரமமாக ஒவ்வொன்ருகக் கூறிச் செல்வதைக் காண்கின்ரேம். பெண்களுக்குள்ள பெருமைகள் எல்லாவற்றையும் தன் மனதிலே பதித்துப் பின் அவற்றை ஒரு பட்டியலாகத் தருகின்ருர். பெண்களைப் பற்றிய அவரது கருத்துக்கள் இங்கு சிறப்பாக இடம்பெறுகின்றன. அவ்விதம் கருத்துக்கள் சிறப்பிடம் பெறுகின்ற காரணத்தாலே, உணர்ச்சிகள் சிதறிப் போகின்றன. சமுதாயத்திலே பெண்களுக்குரிய நிலையைப் பார்த்து அதிலே மனதைப் பறிகொடுத்து ஆட்பட்ட நிலையிலே நின்று பாடியதாக இல்லாமல் அவர்களது ஒவ்வொரு செயலையும் எடுத்து அழகாகக் கூறுவதாகவே அமைந்துள்ளது. பாரதியார் பெண்களைப்பற்றிப் பாடும்பொழுது உணர்ச்சி நிலையிலே நின்று பாடுவதாகவே உள்ளது. "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்", "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே", "வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்" என்ற அடிகள் பாரதியாரின் உணர்ச்சி வசப்பட்ட நிலையினைத் தெரிவிக்கின்றன.

"நாடிப் புலங்கள் உழுவார் கரமும்
நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும்
செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும்
உவந்து நடம்
ஆடிக் களிக்கும் மயிலே உன்பாதம்
அடைக்கலமே"

என்ற கவிமணியின் கவிதை நல்ல கவிதையாகப் பலராலும் போற்றப்படுகிறது ஆயினும் இவரது படைப்புக்கள் பெரும்பாலும் யாப்புக்களாகவே உருவெடுக்கின்றன.

பொதுவாக இவருடைய கவிதைகள் கனமாக இருக்கும் பொழுது சொந்தமானதாக இராமல் தழுவலாக இருக்கிறது. அவை சொந்தமாக இருக்கும்பொழுது கனமாக இருப்பதில்லை.

எனினும், 20-ஆம் நூற்ருண்டிலே கவிதையைப் பொதுமக்களும் புரிந்து படிக்கச் செய்தவர்கள் வரிசையிலே கவிமணிக்கும் இடமுண்டு. பாரதி, பாரதிதாசன் போன்ற கவிஞர்களிடையே காணப்படும் வேகம், துடிதுடிப்பு, உணர்ச்சிவசப்பட்ட நிலை இவரது பாடல்களிலே காணப்படாவிட்டாலும், காலத்திற்கேற்ற நடை, மனித முன்னேற்றத்திற்கான முற்போக்குக் கருத்து, அவர் கையாண்ட வடிவம் என்பவற்றிற்காகக் கவிமணி மிகவும் பாராட்டப்படுகின்ருர்.

# இலங்கை அமைச்சரவை அமைப்பு முறையின் தனிப்பண்புகள்

*(O. ஆறுமுகம் B. A. Hons.)*

உதவி விரிவுரையாளர், அரசறிவியற்றுறை, பேராதனை வளாகம்,

பிரித்தானிய பாராளுமன்ற ஆட்சி முறையில் இயங்கும் அரசியல் அமைப்பு முறை (கபினட்) அமைச்சரவை ஆட்சி முறை என்று கூறப்படும். அமைச்சரவை ஆட்சிமுறைக்கு அடிப்படை அம்சமாகத் தேவைப்படுவது கட்சிகளாகும். பொதுத் தேர்தலில் எந்தக் கட்சி பிரதிநிதிகளை மக்கள் பெரும்பான்மையாக தெரிகின்றார்களோ அக்கட்சி ஆளும் கட்சியாக அரசியல் பொறுப்பை ஏற்கும். இக்கட்சித் தலைவர் பிரதமராகத் தெரிவு செய்யப்படுவார். இவர் தனது கட்சியின் அங்கத்தவர்களைக் கொண்டு அமைச்சரவையை அமைப்பார். இவ்வமைச்சரவையே முழு நாட்டினதும் அரசாட்சிக்குப் பொறுப்பாகும். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை அங்கத்தவர்களின் ஆதரவை அரசாங்கம் பெறும்வரை ஆட்சியில் இருக்கும். இதுவே அமைச்சரவை முறையின் அடிப்படையாகும்.

அமைச்சரவை ஆட்சி முறையின் அடிப்படை அம்சங்கள் அனைத்தும் பிரித்தானியாவை அடியொற்றியே வளர்ந்து வந்துள்ளது. பிரதிநிதித்துவ ஆட்சிமுறை தோன்றியது பிரித்தானியாவிலேயேயாகும். இந்த முறையைப் பின்பற்றியே பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகள் சில மாற்றங்களுடன் புதிய முறையாக அரசியல் அமைப்புகளை வகுத்துக்கொண்டன.

நாம் எந்த ஒரு நாட்டினதும் அமைச்சரவை ஆட்சிமுறையைப்பற்றி ஆராயவேண்டுமாயின் அதன் ஆரம்பத்தையும், பின்னணியையும் அவசியம் நோக்கவேண்டும். பிரித்தானியாவே அமைச்சரவை ஆட்சிமுறையின் தாய் நாடாக விளங்குவதால் அந்த நாட்டில் உள்ள அமைச்சரவை அமைப்பின் இலட்சணங்களைக் கொண்டு எமது இலங்கை அமைச்சரவையை அதனுடன் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் பார்க்கும்போது எமது அமைச்சரவை எவ்வாறான புதிய தனித்துவங்களைக் கொண்டுள்ளது என அறிய முடியும்.

பிரித்தானிய பாராளுமன்ற முறை பல நூற்றாண்டுக் கால வரலாற்றை உடையது. இந்த வரலாற்று ரீதியான அனுபவங்களின் மூலமே அங்கு இன்றைய நிலையில் அமைச்சரவை மிக உயர்ந்த நிலையில் விளங்குகின்றது. பிரித்தானிய மக்களும் அரசியல்ரீதியாகப் பலவருட அனுபவங்களைக் கொண்ட அரசியல்முதிர்ச்சியுள்ளவர்களாக உள்ளனர். அங்கு உறுதியான வளர்ச்சியுற்ற இரண்டு கட்சிகள் உள்ளன. கொள்கையடிப்படையில் கட்டுண்ட கட்சி அங்கத்தவர்கள் உள்ளனர். இன, மத, மொழி, குல பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட சிந்தனைகளைக் கொண்டவர்களாக விளங்கும் மக்கள் கொள்கை ரீதியாகவே சிந்திப்பவர்களாகவும் உள்ளனர். அத்தோடு இவர்கள் உயர்ந்த கல்வித்தரம் உடையவர்களாகவும் விளங்குகின்றனர். எனவே, அமைச்சரவை ஆட்சி முறையானது இங்கு சிறப்புடன் இயங்குகின்றது.

இலங்கை அமைச்சரவையைப்பற்றி ஆராய்வதற்கு முன்னர் நாம் இலங்

கைக்கு அவ்வமைச்சரவைமுறை எவ்வாறு வந்தது என்பதைப்பற்றிப் பார்க்க வேண்டும். 18-ம் 19-ம் நூற்றுண்டுகளில் பிரித்தானிய ஏகாதிபத்திய நடவடிக்கைகளின் உச்சகட்டமாக நாடு பிடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. 18-ம் நூற்றுண்டின் இறுதியிலும், 19-ம் நூற்றுண்டின் ஆரம்பகாலத்திலும் பல ஆசிய, ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. இவர்கள் அந்நாடுகளில் மேற்கொண்ட பல்வேறு அரசியல், பொருளாதார, சமூக நிர்வாக மாற்றங்கள் குறிப்பிட்ட நாடுகளின் சகல தனித்துவமான பண்புகளையும் மாற்றிவிட்டன. இந்நாடுகளில் பண்டய மானியமுறை ஆட்சியமைப்பில் இருந்த முறைகள் மாற்றப்பட்டு படிப்படியாகப் பிரித்தானிய முறையிலான ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஈற்றில் ஒவ்வொரு நாட்டையும் விட்டு வெளியேறும்போது அமைச்சரவை ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திவிட்டே சென்றுர்கள். ஆனல் பிரித்தானியர் அரசியலில் தமது ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திஞலுங்கூட அதற்கான சூழ்நிலைகள் புதிய அரசுகளில் கருவுற்றிருக்கவில்லை. (புதிய அரசுகள்:- 1945ன் பின் சுதந்திரம் பெற்றவை) எனவே அமைச்சரவை ஆட்சிமுறையின் அடிப்படையம்சங்களிலிருந்து பல வழிகளில் புதிய அரசுகளின் அமைச்சரவை இயக்கமுறை மாறுபட்டதுடன் சில தனித்துவ அம்சங்களும் வெளிப்பட்டன. எமது இலங்கையும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து 1948-ல் சுதந்திரம் அடைந்த ஒரு புதிய அரசாக இருப்பதால் இதே பண்புகளை இலங்கை அமைச்சரவை இயக்கப்பாட்டிலும் தெளிவாக காணக்கூடியதாக இருக்கின்றது. இலங்கை ஒரு வளர்முக நாடாகும். பொருளாதார ரீதியில் பின் தங்கியதாக இருப்பதால் பலவேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது. அத்தோடு இலங்கையில் பல இன, பலமொழி, பலமத, பலசாதி, பலவர்க்கப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றுர்கள் சமூகரீதியான இந்தப் பிரிவுகளைவிட பிரதேசரீதியான பிளவுகளையும் காணக்கூடியதாக உள்ளது மேலும், பிரித்தானியர் அல்லது மேலைத்தேய மக்களைப்போன்று கல்விநிலைமையில் நாம பூரண அபிவிருத்தி அடையவில்லை 1948-ஐ விட இன்று கல்வித்தரம் கூடி இருந்தாலும் இது பூரண வளர்ச்சியாகத் தெரியவில்லை எனவே, இந்த அம்சங்கள் அனைத்தும் இலங்கை அமைச்சரவை அமைப்பில் தாக்கத்தை ஏற்படுத்துவது தவிர்க்கமுடியாததாகும்.

1947 ல் அறிமுகப்படுத்தப்பட்ட சோல்பரி அரசியல் திட்டத்தின்மூலம் இலங்கை அமைச்சரவை ஆட்சிமுறையில் காலடி எடுத்து வைத்தது இதற்கு முன்னர் நடைமுறையிலிருந்த டொனமூர் அரசியல் திட்டத்தில் மந்திரிசபை முறை இருந்தாலும் அது பூரண அமைச்சரவை முறையாக இருக்கவில்லை. ஒவ்வொரு நிர்வாகக் குழுக்களின் அங்கத்தவர்களும் அதன் தலைவரைத் தெரிவு செய்தனர். இவர்கள் அனைவரும் சேர்ந்து மந்திரிசபையாக இயங்கினர். ஆனல் தற்போதைய அமைச்சரவையைப்போன்று ஒரு தலைவரின்கீழ் ஒத்த கொள்கையை ஏற்றவர்களாக கூட்டுப் பொறுப்புடன் இயங்கவில்லை. ஒவ்வொருவரும் தனித்தனியாக இயங்கினுர்கள். ஒருவரது கொள்கையை இன்னெருவர் எதிர்த்தார். சுய தீர்மானங்களே கூடியளவு எடுக்கப்பட்டன. இங்கு ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்ற முறையில் ஆட்சி நடைபெறவில்லை. இந்த நடைமுறை அடுத்து அறிமுகப்படுதப்பட்ட சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழான அமைச்சரவை ஆட்சிமுறையில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தியது. சோல்பரி குழுவினர் பழைய நிர்வாகக் குழு முறையை நீக்கினுலும் டொனமூர் அரசியல் திட்டத்தின் நடைமுறைகளை

நீக்கமுடியவில்லை என்று சேர் ஐவர் ஜென்னிங்ஸ் குறிப்பிட்டிருக்கின்றார்கள். 1947-ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட அமைச்சரவை ஆட்சிமுறைக்கு அடிப்படையாக எந்தவிதமான அடிப்படை அம்சங்களும் இலங்கையில் இருக்கவில்லை. பாராளுமன்ற ஆட்சிமுறையில் அமைச்சரவை அரசாட்சி நடைபெறுவதாக இருந்தால் நிச்சயமாக அங்கு வளர்ச்சியுற்ற கட்சிகள் இருக்கவேண்டும். ஆனால் 1947-ம் ஆண்டில் இலங்கையில் முறையாக வளர்ந்த கட்சிகள் இருக்கவில்லை. 1935-இல் ல. ச. ச. கட்சியும், 1943-ல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அவை பூரணமாக வளர்ச்சியுற்றிருக்கவில்லை. இவற்றைத்தவிர இனரீதியான பல குழுக்கள் இக்காலத்திலிருந்தன. சிங்கள மகாசபை, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தேசிய காங்கிரஸ் போன்ற குழுக்கள் கொள்கையடிப்படையில் கட்சி என்ற முறையில் வளர்ச்சியுற்றிருக்கவில்லை. எனவே புதிதாக அமைச்சரவை ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதற்கென்றே கட்சிகள் உருவாக்கப்பட்டன. இலங்கைத் தேசிய காங்கிரஸும் ஏனைய இனவாதக் குழுக்களும் ஐக்கிய தேசியக்கட்சி என்ற பெயரில் மாறின. எனவே ஐ. தே. கட்சி உண்மையான கோட்பாட்டு ரீதியாக உருவாக்கப்படவில்லை. ஒழுங்கான அமைப்போ திட்டமோ இருக்கவில்லை. ஒரு தேவைக்காக இணைக்கப்பட்ட கூட்டமைப்பான இதில் தீவிரவாதிகள் மிதவாதிகள், இனவாதிகள் அனைவரும் இருந்தனர். இவற்றைவிட பல தனிப்பட்ட நபர்கள் சிறு சிறு கட்சிகளை அமைத்திருந்தார்கள். எனவே, முதலாவது பாராளுமன்றத் தேர்தல் முடிந்த பின்பு எந்தக் கட்சியும் பூரண பெரும்பான்மை பெற்றிருக்கவில்லை. 95 ஆசனங்களில் 42 ஆசனங்களைப் பெற்ற ஐ. தே. கட்சியே பெரும்பான்மை பெற்ற கட்சியாக இருந்தது. இதில் தலைவர்கள் ஏனைய சுயேச்சை அங்கத்தவர்கள், தமிழ்க் காங்கிரஸ் போன்றவற்றின் ஆதரவைப் பெற்று மந்திரிசபையை அமைத்தனர். இதனால் ஒரே கொள்கையுடைய அங்கத்தவர்கள் மந்திரிசபையில் இடம்பெற முடியவில்லை. அரசாங்கமும் திட்டவட்டமான கொள்கைகளைக் கடைப்பிடிக்க முடியவில்லை.

ஆனால் இன்று இலங்கையில் கட்சிகள் ஓரளவு வளர்ச்சியுற்றனவாகவே யுள்ளன. இருப்பினும் பிரித்தானியாவில் இருப்பதுபோல அரசாங்கம் அமைக்கக் கூடிய தனிக் கட்சிகளோ, சக்திவாய்ந்த எதிர்க்கட்சியோ இங்கில்லை. இந்தத் தாக்கம் இலங்கையின் அமைச்சரவை நடைமுறையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

1947 — 52 வரை நடைமுறையிலிருந்த அமைச்சரவையில் பல்வேறு கொள்கையுடையவர்கள் இருந்தார்கள். அதன் பின்னைய அமைச்சரவையிலும் அதே நிலையே இருந்துவந்துள்ளது. 1956-ல் S. W. R. D. பண்டாரநாயக்கா தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் மிதவாதப் போக்குடைய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரும், தீவிரவாதிகளான புரட்சிகர ல. ச. ச. கட்சியினரும் அங்கம் வகித்தார்கள். 1960 — 64 இல் திருமதி பண்டாரநாயக்கா மந்திரிசபையில் சி. பி. டி. சில்வாவின் தலைமையிலான பழமை வாதிகளும், திருமதி பண்டாரநாயக்கா தலைமையிலான மிதவாதிகளும் அங்கம் வகித்தார்கள். 1965 — 70 இல் டட்லி சேனநாயக்கா அமைச்சரவையில் ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் ஒரு பிரிவினரும், டட்லி தலைமையில் ஒருபிரிவினரும் இயங்கினர். இதில் தமிழரசுக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி அங்கத்தவர்களுமிருந்தார்கள். 1970 —74 இல் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணியின் அமைச்சரவையில் ஸ்ரீ ல. சு. கட்சி, ல. ச. ச. கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சி அங்கத்தவர்கள்

அங்கம் வகித்தார்கள். இந்த அமைச்சரவைகள் அனைத்திலும் ஒரே கொள்கையுடைய ஒத்துப்போகக் கூடியவர்கள் எவரும் இருக்கவில்லை

இந்த அமைச்சரவையின் நடைமுறைகளைக்கொண்டு பார்க்கும்போது இலங்கையிலுள்ள கட்சிகள் திட்டவட்டமான கொள்கையடிப்படையில் வளர்ச்சி பெற்றிருக்காமையும். அதனால அமைச்சரவையில் ஏற்பட்ட விளைவுகளையும் தெளிவாக அறியலாம் தனிக்கட்சி அமைச்சரவையை அமைத்திருந்தால் கொள்கைப் பிரச்சனைகள் அதிகமாக ஏற்பட்டிருக்காது. ஆனால் இலங்கையின் அதிகமான அமைச்சரவைகள் கூட்டுக்கட்சி அமைப்புக்களாகவே இருந்துள்ளன தனிக் கட்சி அமைச்சரவையிலும்கூட கொள்கைப் போராட்டங்கள் சாதாரணமாக நடைபெற்றுள்ளன. இவற்றைக் கொண்டு இலங்கையில் அமைச்சரவை ஆட்சிமுறை ஒழுங்காக இயங்குவதற்கு கட்சி வளர்ச்சி ஏற்பட்டிருக்கவில்லையென்றும், அமைச்சரவை ஆட்சிமுறை புகுத்தப்பட்ட பின்பே கட்சிகள் வளரத் தொடங்கியது என்பதும் புரிகின்றது.

இலங்கைக்கு அமைச்சரவை ஆட்சிமுறை திடீரெனப் புகுத்தப்பட்டது அனுபவமற்ற சூழலில் புதிதாக இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டதால நடைமுறைக்கு மாறான அம்சங்கள் இடம் பெற்றன. ஆனால், இவ்வம்சங்கள் இலங்கையில் மட்டுமல்ல எல்லாப் புதிய அரசுகளிலும் இடம்பெறும் சாதாரண அம்சமாகும.

இவ்வாறான பின்னணியில் அமைச்சரவை ஆட்சிமுறையின் அடிப்படை அம்சமான கூட்டுப்பொறுப்பு எவ்வளவுதூரம் இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்டது எனப் பார்ப்போம். அமைச்சரவையின் நடவடிக்கைகள் அனைத்தும் மிகவும் இரகசியமாகவே வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஓர் அமைச்சர் கொண்டுவந்த கொள்கைத் திட்டம் பிழையானது அல்லது குறையானது என விமர்சிக்கப்பட்டால் அதற்கு எல்லா அமைச்சர்களுமே பொறுப்பேற்கவேண்டும். அரசாங்கத்தின் கொள்கையை அனைவரும் ஆதரித்துப் பேசவேண்டும். ஆனால், இந்த நடைமுறை இலங்கையைப் பொறுத்தளவில் மிகவும் குறைவாகவே இருந்துவந்துள்ளது இதற்குக் காரணம் கட்சி அங்கத்தவர்கள் கொள்கைப் பற்றில்லாதவர்களாகவும், கூட்டுக்கட்சியமைப்பும். இதைவிட மிகப் பிரதானமான பழக்க தோஷம் என்ற காரணியையும் குறிப்பிடலாம். டொனமூர் அரசியல் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மந்திரியும் சுயமாகவே இயங்கினர். இவர்களிடம் கூட்டுப் பொறுப்பு இருக்கவில்லை. ஒன்றிணைந்து இயங்கப் பழகாதவர்கள் அமைச்சரவை ஆட்சிமுறையிலும் அவ்வாறாகவே இயங்க முற்பட்டார்கள். சமீப காலம்வரை அமைச்சர்களாக இருந்தவர்களில் அநேகமானோர் டொனமூர் நிர்வாகக் குழுமுறையின்கீழ் அமைச்சர்களாக இருந்தவர்களேயாவர்.

இலங்கையின் அரசியல் திட்டத்திலும் கூட்டுப் பொறுப்புப்பற்றித் திட்டவட்டமாகக் கூறியிருந்தாலும் அதனைக் கடைப்பிடிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டே வந்துள்ளன. 1947 – 52 அமைச்சரவையில் பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவுக்கும் சிங்கள மகாசபைத் தலைவரான எஸ். டபிள்யு ஆர். டி பண்டாரநாயக்காவுக்குமிடையே அடிக்கடி கருத்து முரண்பாடு ஏற்பட்டுவந்தது. அரசாங்கக் கொள்கைக்கு மாறாக அதிகமான அமைச்சர்கள் பகிரங்கமாகக் கண்டனம் தெரிவித்தார்கள். தேர்தலில் ஐ தே கட்சியை எதிர்த்துப் போட்டியிட்டவர்களும் ஐ. தே. கட்சியின் அமைச்சரவையில் அங்கம் வகித்தார்கள் இவ்வாறு முரண்பட்ட கொள்கையுடையவர்கள் ஒன்றாக இயங்கும்போது கூட்டுப் பொறுப்புடன் இயங்குவார்கள் என எதிர்பார்க்க முடி

யாது. பல கட்சி, பல கொள்கையுடைய வர்களைக்கொண்டமைக்கப்பட்ட அமைச்ச ரவைகள் யாவற்றிலும் கூட்டுப்பொறுப் பின்மை தெளிவாக வெளிப்பட்டது. கூட்டுப் பொறுப்பைக் கடைப்பிடித்து அரசாங்கக் கொள்கையை எல்லோரும் ஒருமனதாக ஆதரிக்க வேண்டுமென்று பிரதம மந்திரிகள் பலமுறை சுட்டிக் காட்டியுள்ளார்கள் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, சி. சுந்தரலிங்கம் என்போர் அரசாங்கக் கொள்கையைப் பகிரங்கமாக எதிர்த்ததால் பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா 1948-ல் கூட்டுப் பொறுப்பின் அவசியம்பற்றி அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அரசாங்கக் கொள்கையில் பிடிப்பில்லாதவரை ராஜி னுமா செய்யும்படி பிரதமர் கோரலாம். ஆனால் மிக முக்கியமான அங்கத்தவர் களை வெளியேற்றுவதன் மூலம் முழு அரசாங்கமே கவிழவேண்டிய நிலை ஏற் படலாம் என்பதால் 1948-ல் எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்காவை டி. எஸ். சேனநாயக்காவால் எதுவும் செய்ய முடியவில்லை. ஆனால் திரு. சி. சுந்தரலிங்கத்தை ராஜினுமாச் செய்யும் படி வேண்டினர்.

1952 இல் ஐக்கிய தேசியக் கட்சி பூரண பெரும்பான்மையுடன் அமைச்ச ரவை அமைத்தாலும் பிரதமரான டட் லிக்கும், பிரதமராவதற்கு முயற்சித்த சேர். ஜோண் கொத்தலாவலைக்கும் அடிக் கடி பிரச்சனைகள் ஏற்பட்டன அமைச் சர்களிடையே பல்வேறு கருத்து முரண் பாடுகள் இருந்தன. 1953 — 56 க்கும் இடையே பகிரங்கமாகக் கருத்து முரண் பாடுகள் மேடைகளில் பேசப்பட்டன. கந்தையா வைத்தியநாதன் அரசாங்கத் தின் மொழிக் கொள்கையை எதிர்த்து வெளிநாடுகளிலும்கூட கண்டனம் தெரி வித்தார். ஆர். ஜி. சேனநாயக்காவுக் கும். ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் தீவிரமான கருத்து முரண்பாடுகள் இருந் தன. 1953-ல் பிரதமரான கொத்தலாவலை யால் எவ்வளவு முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டும் கூட்டு முயற்சிகள் கடைப் பிடிக்கப்படவில்லை.

1956-ல் அமைக்கப்பட்ட அரசாங்கம் சுதேச கலை, கலாச்சார பாரம்பரியங் களைக் கடைப்பிடிக்கும் உயர் குழாத்தின ரைக் கொண்டிருந்தது. எஸ். டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்கா தலைமையில் அமைக்கப்பட்ட இவ்வமைச்சரவை ஒரு தனிக்கட்சி அமைச்சரவையாக இருக்க வில்லை. பண்டாரநாயக்கா தலைமையி லான ஸ்ரீ ல. சு. கட்சியும், பிலிப் குணவர்த்தன தலைமையிலான புரட்சிகர ல. ச. ச. கட்சியும் சேர்ந்து ம. ஐ. முன் னணி என்ற பெயரில் அரசாங்கத்தை அமைத்தனர். இங்கு மார்க்ஸிய வாதி களான பிலிப் குணவர்த்தன கட்சியின ருக்கும், ஸ்ரீ ல. சு. கட்சியினருக்கும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. ஸ்ரீ ல. சு. கட்சியில் தூய்மையான இடது சாரிகளோ அல்லது வலதுசாரிகளோ இருக்கவில்லை. இரு பிரிவினரும் இருந் தார்கள். இதனால் ஒருமனதான கொள்கைகளைக் கடைப்பிடிக்க முடிய வில்லை. பண்டாரநாயக்கா சோஷலிசக் கொள்கையில் விருப்புடையவராக இருந்த போதும் ஏனையவரின் செல்வாக்கால் இவரால் தீவிரமாக இயங்க முடியவில்லை. பிலிப் குணவர்த்தன கொண்டுவந்த காணிச் சட்டம், கூட்டுறவுச் சட்டம் என் பன அவரின் செல்வாக்கைக் கூட்டிவிடும் எனப் பயந்த ஸ்ரீ ல. சு. கட்சியினரால் எதிர்க்கப்பட்டது. சி. பி. டி. சில்வாவும், ஏ. பி. ஜெயசூரியாவும் பகிரங்கமாக மோதிக்கொண்டார்கள். பிலிப் குண வர்த்தன, வில்லியம் சில்வா என்போரை அமைச்சரவையிலிருந்து வெளியேற்று விட்டால் தாம் மந்திரிசபைக் கூட்டத் திற்குச் சமுகமளிக்க மாட்டோம் என டபிள்யு. தஹநாயக்கா தலைமையில் ஸ்ரீ ல. சு. கட்சியின் சில உறுப்பினர்கள் அமைச்சரவைக் கூட்டத்தைப் பகிஷ் கரித்தனர். இவ்வாறான செயல் இலங்கை

யிலேயே நடைபெற்றது என விசேட மாகக் குறிப்பிடலாம். இவர்களின் நடத்தையால் இடதுசாரிகள் அரசாங் கத்தைவிட்டு வெளியேற்றப்பட்டனர்.

எஸ். டபிள்யு ஆர். டி. பண்டார நாயக்கா தமது மந்திரிகள் கூட்டுப் பொறுப்பைக் கடைப்பிடிக்காமை பற்றி யும், ஒருவரையொருவர் பகிரங்கமாகத் தாக்கிப் பேசுவதையும் கடுமையாகக் கண்டித்தபோதும் இதற்கு வெற்றி கிடைக்கவில்லை. இதனால் இலங்கைக்கு அமைச்சரவை ஆட்சிமுறை உகந்ததல்ல வென்றும், மீண்டும டொனமூர் ஆட்சி முறை கொண்டுவருவதே சிறந்ததென் றூர். இதனால் எல்லோரும் ஒரேகொள்கை யைக் கடைப்பிடிக்கவேண்டிய அவசிய மும், பொறுப்புக் கூறவேண்டிய தேவை யும் இருக்காது என்று அவர் குறிப்பிட் டார்

1959 இல் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொலையையடுத் துப் பிரதமராக நியமனம்பெற்ற டபிள்யு. தஹநாயக்கா பல குழறுபடி யான நடவடிக்கைகளை மேற்கொண் டார் ஸ்ரீ ல. சு. கட்சி அங்கத்தவர் களுக்கும் இவருக்கும் பெரும் முரண்பாடு கள் ஏற்பட்டன. ஸ்ரீ ல. சு. கட்சி அங் கத்தவர்கள் அனைவரையும் வெளியேற்றி விட்டுத் தமக்கு விருப்பமானவர்களை அமைச்சர்களாக்கினர். பாராளுமன் றத்தில் ஆதரவு கிடைக்காதென்பதை உணர்ந்து பாராளுமன்றத்தைக் கலைத் தார்.

1960 — 64 இல் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அமைச்சரவையில் ஸ்ரீ ல. சு. கட்சி அங்கத்தவர்கள் மாத்திரமே இருந்தாலும் அதிலும் பிரச்சனைகள் ஏற் படத்தான் செய்தன. 1964-ல் இடது சாரிகளை அரசாங்கத்தில் சேர்த்துக் கொண்டதால் ஸ்ரீல. சு. கட்சியின் வலது சாரிக் கோஷடிக்கும் ஏனையவர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டது. சி. பி. டி சில்வா தனது தலைமையில் தனியாக இயங்கி னர். ஈற்றில் 1964 டிசம்பரில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து அரசாங் கத்தைத் தோற்கடிப்பதற்கும் காரண மாகினர்.

1965 இல் மீண்டும் ஐ. தே. கட்சி ஆட்சி பெற்றது. இம்முறையும் பூரண பெரும்பான்மையை ஐ. தே. கட்சி பெறாத தால் ஏனைய ஆறு கட்சிகளுடன் இணைந்து தேசிய அரசாங்கம் என்ற பெயரில் புதிய அரசாங்கம் அமைத்தது. இங்கும் பிரச்சனைகளுக்குக் குறைவிருக்க வில்லை. பிரதமர் டட்லிக்கும் முக்கிய தலைவரான ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக் கும் முரண்பாடு ஏற்பட்டது 1967-ல் ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்குத் தெரி யாமலேயே அவரது அமைச்சுக்களில் மாற்றங்களை டட்லி கொண்டுவந்தார். 1968-ல் தமிழரசுக்கட்சிக்கும் அரசாங்கத் திற்குமிடையே முரண்பாடு ஏற்பட்ட தால் தமிழரசுக்கட்சி அமைச்சரான எம். திருச்செல்வம் இராஜினமாச் செய் தார்.

1970—77வரை நடைமுறையிலிருந்த அமைச்சரவையின் நடவடிக்கை மிகவும் முக்கியமானதாகும். ஸ்ரீ ல. சு. கட்சி, ல. ச. ச. கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சி என்பன சேர்ந்து அமைத்த ஐக்கிய முன்னணி மிகப் பெரும்பான்மைபெற்று அரசாங்கத்தை அமைத்தது. இவர் களுக்கிடையே ஒப்பந்த அடிப்படையில் கொள்கையுடன்பாடு ஏற்பட்டாலும் நடைமுறையில் பல்வேறு பிரச்சனைகள் ஏற்பட்டன. ஸ்ரீ ல. சு. கட்சி ஒரு பல மான கட்சியாக வளர்ச்சி பெற்றிருந்தா லும், கொள்கையடிப்படையில் அங்கு எல்லோரும் ஒன்றுபட்டிருக்கவில்லை. வலதுசாரிகள், இடதுசாரிகளின் செல் வாக்குக் கூடிவிடும் என்ற பயத்தால் அவர்களை வெளியேற்ற முயற்சி செய் தார்கள். ஸ்ரீ ல. சு. கட்சியின் இடது சாரிகள். ஏனைய இடதுசாரிக் கட்சிக ளுடன் ஒன்றுபட்டியங்கினர். தனிக் கட்சி அரசாங்கமே ஒழுங்காகச் செயற்

படாதபோது கூட்டரசாங்கம் ஒழுங்காகச் செயற்படும் என்பது எதிர்பார்க்க முடியாத ஒன்ருகும். ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளைக்கொண் டமைக்கப்பட்ட எல்லா அமைச்சரவைகளிலும் கோன்கைப் போராட்டம் பொதுவான ஒன்ருகவே இருந்தது. ஆனுல் 1970-ல் அமைக்கப்பட்ட ஐ. முன்னணி அமைச்சரவையில் இது மிகவும் கூடியதாக இருந்தது. ஒருவரை ஒருவர் வீழ்த்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள்.

இவ்வமைச்சரவையில் ல. ச ச. கட்சி மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பெற்றிருந்தது. கலாநிதி என். எம். பெரேரா நிதியமைச்சராக இருக்க, ஸ்ரீ ல. சு. கட்சியின் முக்கிய அங்கத்தவரும், தீவிர வலதுசாரியுமான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நீதி-பொதுநிர்வாகம் போன்ற பல முக்கிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பாக இருந்தார். இவர்களுக்கிடையே அடிக்கடி பிரச்சனைகள் பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்டன 1973-ன் பின்பு கொள்கை ரீதியான முரண்பாடுகள் தீவிரமடைந்தன. தேசியமயம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளே முக்கியமாக இருந்தாலும், காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் கொள்கையோடு சம்பந்தப்பட்டதாகவே அவை வெளிப்பட்டன. திருமதி ஸ்ரீமாவோ தாம் இறக்குமதி செய்யப்பட்ட கொள்கைகளுக்கு இடம் கொடுக்கமாட்டார் எனவும், தமது கொள்கை இலங்கைக்கே உரியது என்றும் குறிப்பிட்டார். கலாநிதி பெரேரா. "பண்டாரநாயக்கா கோட்பாடுகள்" என்ற பெயரில் வீண் புரட்டுகளே நடத்தப்படுகின்றன என்று குற்றம்சாட்டினுர். இவை அனைத்தும் ஒரே அமைச்சரவைகளுக்குள்ளேயே இடம் பெற்றது.

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியைச் சேர்ந்த ரி. பி. சுபசிங்காவும் அவர் சகாக்களும் இடதுசாரிகளை ஆதரிக்க. பீலிக்ஸ் தலைமையிலான குழு ஸ்ரீமாவோவை ஆதரித்தது. பகிரங்கமாக மோதிக்கொண்ட இவர்கள் தமது கட்சிக் கொள்கைகளை நிலைப்படுத்தி தங்கள் செல்வாக்கை வளர்த்துக்கொள்ள முயற்சித்தனர். 1976 வரை இலங்கையில் இவர்களது போராட்டமே முக்கியமானதாக அமைந்திருந்தது. 1975-ன் இறுதிப் பகுதியில் லங்கா சமசமாஜ கட்சியினரைப் பிரதமர் ஸ்ரீமாவோ அமைச்சரவையிலிருந்து இராஜினுமா செய்யக் கோரினுர். ஆனுல் அவர்கள் வெளியேற மறுத்து அமைச்சரவையில் அங்கத்தவர்களாகவே இருந்தார்கள். மந்திரிசபைக் கூட்டங்களுக்கும் அழைக்கப்படவில்லை. இவ்வாண்டின் இறுதியில் லங்கா சமசமாஜக் கட்சி அமைச்சர்கள் மூவரும் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர் இவர்களோடு சேர்ந்து பின்னர் ரி பி. சுபசிங்காவும், அவரது சகாக்களும் வெளியேறினுர்கள். ஆரம்பத்தில் இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சி இப்பிரச்சனையில் நடுநிலைமை வகித்தாலும் பின்னர் அதுவும் வெளியேறியது. இவ்வாறு அமைச்சரவைக் குள்ளேயே குழறுபாடுகள் 1973-ன் பின்பு சாதாரணமானதாக இடம்பெற்றது அமைச்சரவை ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டு 30 ஆண்டுகளின் பின்பும் பழைய நிலைமையே நீடித்தது.

இவ்வாறு இலங்கை அமைச்சரவை அமைப்பு முறையில் கூட்டுப் பொறுப்பின்மையும் ஒரே கொள்கையைக் கடைப்பிடிக்காமையுமு முன்னர் குறிப்பிட்ட பல காரணங்களாலேயே ஏற்பட்டுள்ளன. எந்தவித பயிற்சியுமின்றி புதிதாக இலங்கைக்கு மந்திரிசபை ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. திட்டவட்டமான கோட்பாட்டடிப்படையில் கட்சிகள் வளரவில்லை கட்சிகளுக்குள்ளே தலைமைத்துவப் போட்டி, குழுவாதம், கொள்கை வாதம் என்பன தலைதூக்கியிருந்தன இதற்கு உதாரணமாக D.S சேனநாயக்கா, S. W. R. D. பண்டாரநாயக்காவும்; டட்லியும் கொத்தலாவலையும்; J. R.

உம் ஐக்கிய தேசியக் கட்சிகள் மோதிக் கொண்டமையையும் திருமதி ஸ்ரீமாவோவும் C. P. D சில்வாவும்; பீலிக்ஸூம் சுப சிங்காவும் ஸ்ரீ ல. சு. கட்சிக்குள் மோதிக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு மோதிக்கொண்டவர்கள் பிற்காலத் தலைவர்களாக வந்துள்ளார்கள்.

மெல்போன் பிரபு, ''அமைச்சர்கள் பொதுக்கருத்தையே வெளியிடவேண்டுமென்றும், ஒரே பேச்சையே பேசவேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார். சேர். ஐவர் ஜெனின்ஸ் ''தனிப்பட்ட அமைச்சரைத் தாக்குவது அரசாங்கத்தைத் தாக்குவது'' என்றும் தனிப்பட்ட அமைச்சரின் தோல்வி அரசாங்கத்தின் தோல்வி என்றும் குறிப்பிட்டுள்ளார், அமைச்சரவை ஆட்சியில் இது முக்கியமான அம்சமாக இருக்கவேண்டும். ஆனால் இந்த அம்சம் இலங்கையில் குறைபாடுடையதாகவே இருக்கின்றது.

மேற்குறிப்பிட்ட அம்சங்களைவிட இலங்கையின் அமைச்சரவையுடன் வேறுபல அம்சங்களும் தொடர்புபட்டுள்ளன. இதுவரை இலங்கையிலிருந்த அமைச்சரவைப் பிரதானிகளான பிரதமர்கள் யாவரும் பௌத்த, சிங்கள, கொய்கம சாதியைச் சார்ந்தவர்களாகவே இருந்துள்ளார்கள். ஏனைய சாதியினர் பிரதமராக வருவதற்கு எடுத்த முயற்சிகள் வெற்றிபெற முடியவில்லை. 1960-ல் ஸ்ரீ ல. சு. கட்சியின் சிரேஷ்ட தலைவராக இருந்த திரு. சி. பி. டி. சில்வா பிரதமராவதற்கு எல்லாத் தகுதிகளைப் பெற்றிருந்தாலும் அவரால் பிரதமராக முடியவில்லை, காரணம். அவர் கொய்கம சாதியைச் சார்ந்தவரல்ல. ஆனால், 1978-ல் பிரதமராகிய திரு. ஆர். பிரேமதாச வேறு ஓர் சாதியைச் சார்ந்தவராவார். இவர் பிரதமராவதற்கும் பல எதிர்ப்புகள் ஏற்பட்டாலும் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன தனது அதிகாரத்தைக் கொண்டு அவரைப் பிரதமராக்கினர்.

இலங்கை அரசியலில் சாதி, இன, மத, மொழி, பிரதேசவாதம் என்பன கூடிய செல்வாக்கைச் செலுத்துகின்றன இவற்றின் தாக்கம் பிரதானிகளின் தெரிவுமுதல் சாதாரண அமைச்சர் தெரிவுவரை ஆழமாகப் பாதிப்பைச் செலுத்துகின்றது.

மேற்குறிப்பிட்ட தாக்கங்களுடன புவியியல் ரீதியான வேறுபாடும் இலங்கையில் ஓர் அரசாங்கம் அமைப்பதற்குச் செல்வாக்குச் செலுத்துகின்றது. சிங்களவர்களிலும் தாழ்பூமிச் சிங்களவர்கள், மேல்நாட்டுச் சிங்களவர்கள் என்னும் சாதியடிப்படையிலும் வேறுபாடுகள் உள்ளது. தமிழர், முஸ்லீம்கள், பௌத்தர், இந்து, கத்தோலிக்கர் என்ற அடிப்படையிலும் பிரிவுகள் உள்ளன. பெரும்பான்மை இனத்தவர்களான சிங்கள, பௌத்தர்களுக்கு முதலிடம் கொடுத்து ஏனைய அத்தனை பிரிவினரையும் திருப்திப்படுத்தக்கூடியதாக அமைச்சரவை அமைக்கப்பட வேண்டும். இதில் ஏதாவது சிறிது குறைபாடிருந்தாலும் எதிர்க்கட்சியினர் அதனைப் பயன்படுத்திக்கொள்வார்கள். இதனால் அமைச்சரவையில் திறமையற்றவர்களும் இடம் பெறச் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

1956—60 வரையிருந்த மந்திரிசபைகளில் தமிழர்களுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனைப் பெரும் குறைபாடாகச் சுட்டிக்காட்டினார்கள். 1965 டட்லி சேனாநாயக்க அமைச்சரவையில் கிறிஸ்தவர் ஒருவருக்கு இடம் கொடுக்கவில்லை என்று எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டினார்கள். இவ்வாறான அம்சம் ஏனைய நாடுகளில் இல்லை- பிரித்தானியாவில் கட்சியின் மூத்த திறமைசாலிகளான அங்கத்தவர்களுக்கே அமைச்சரவையில் முக்கிய இடம் கொடுக்கப்படுகின்றது. இங்கு கட்சிகள் ஸ்திரமானதாகவும், மக்களும் ஜனநாயக ரீதியில் இன, மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டுச் சிந்திக்கின்றார்கள். இங்கு கொள்கையே முக்கியமானதாகக் கவனிக்கப்படுகின்றது. ஆனால், இலங்கை

யில் இதற்கு மாறுபட்ட அம்சமே இருக்கின்றது.

அமைச்சரவை எண்ணிக்கையைப் பொறுத்தளவில் இலங்கை அமைச்சரவை பெரிதாகவே இருந்துவருகின்றது. வேறுபட்ட பல்வேறு பிரிவினரையும் திருப்திப் படுத்தவேண்டிய அ. தே. வே. ஸ்ரீ. யில் கூட்டு அரசாங்கங்களுமே இதற்குக் காரணமாக அமைகின்றன. சிறந்த கட்சியமைப்பிருந்தால் இந்நிலை ஏற்படாது.

இலங்கை அமைச்சரவை அமைப்பில் குடும்ப செல்வாக்கும் முக்கிய இடம் பெறுகின்றது. திரு. டி. எஸ். சேனநாயக்கா தனது புதல்வர் டட்லியை அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டார். திருமதி ஸ்ரீமாவோ தமது உறவினர்களுக்குக் கூடிய முக்கியத்துவம் வழங்கினர். அமைச்சரவைக்கு வெளியே உள்ளவர்களும் தமது செல்வாக்கைச் செலுத்தியதாகக் குறை கூறப்பட்டது. 1976-ல் டைம் (Time) சஞ்சிகை திருமதி ஸ்ரீமாவோவின் குடும்ப செல்வாக்கும் அரசாங்கமும் பற்றிய செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது.

அமைச்சர்களின் சேவையிலும் பாரபட்சம் காட்டப்படுகின்றது. சில அமைச்சர்கள் தமது சொந்தத் தொகுதிகளில் ஏனைய தொகுதிகளை விட கூடிய அக்கறை செலுத்துவதுண்டு. உதாரணமாக பி. பி. ஜி. கலுகல்ல கல்வியமைச்சராயும், போக்குவரத்து அமைச்சராயும் இருந்த காலத்தில் தமது தொகுதிக்கு கூடிய செலவு செய்துள்ளார் எனக் குற்றம் சாட்டப்பட்டது. 1970-ல் கல்வி அமைச்சராக இருந்த கலாநிதி பதியுதீன் முகமத் தான் முன்னர் அதிபராக இருந்த பாடசாலைக்கு ஆகக்கூடிய முக்கியத்துவம் வழங்கியதாகக் கூறப்பட்டது. இதேபோல் ஏனைய தொகுதிகள் புறக்கணிக்கப்பட்டதுடன் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் தொகுதிகள் புறக்கணிக்கப்படுவதும் திட்டமிட்ட அவர்களின் செயலாக இருந்தது.

இலங்கையில் அமைச்சர்களாக இருந்தவர்களில் சிலர் ஒழுக்கக்கேடாக நடந்துவந்துள்ளனர். 1956-ல் அமைச்சராக இருந்த ஜனுப் சி. ஏ. எஸ். மரிக்கார் லஞ்சம் பெற்றுக் குற்றவாளியாகக் காணப்பட்டார். பல அமைச்சர்கள் சட்டரீதியாகத் தண்டனை பெறுவிட்டாலும் பொதுமக்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளனர். 1977 அமைச்சரவையில் சில அமைச்சர்கள் தங்களுக்குள் பாராளுமன்றத்தில் தாராளமாக அடிபட்டுக்கொண்டார்கள். சில அமைச்சர்களுக்கெதிராக அரசாங்கக் கட்சியினரே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முயற்சித்துள்ளார்கள். இவ்வாறனவர்கள் அமைச்சரவையில் இருந்து நீக்கப்படவேண்டும். அல்லது ராஜினாமாச் செய்யவேண்டும். ஆனால் அவ்வாறன நடவடிக்கைகளும் இலங்கையில் மிகக் குறைவாகவே உள்ளது.

இவ்வாறு குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும் அமைச்சரவைப் பண்புகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அமைச்சரவைமுறை ஓரளவாவது அதற்குரிய அம்சங்களைக் கடைப்பிடித்துள்ளது என்பது மறுக்கமுடியாதது. புதிய அமைச்சரவை முறைபற்றி எதுவும் தற்போது கூறமுடியாது. அதன் இயக்கத்தைச் சிலகாலம் கழித்தே அளவிடலாம்.

பொதுவாகப்பார்க்கையில் இலங்கை அமைச்சரவை அமைப்பானது அதற்குரிய சூழ்நிலை சரியாக இல்லாத காலத்தில் புகுத்தப்பட்டதால் இயக்கப்பாட்டில் சில மாறுபாடுகளைக் கொண்டுள்ளது. ஆனால், ஆரம்பகாலத்தைவிட இன்று அதனது நிலை உயர்ந்தே இருக்கின்றது எனக் குறிப்பிடலாம். அரசியல் தலைவர்களும், கட்சிகளும் சுயநலம் காரணமாக நடந்துகொள்ளும் முறையானது இலங்கை அமைச்சரவையைக் கூடுதலாகப் பாதித்துள்ளது.

ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியோடு தேறிய காரணிவருமானத்தைக் கூட்டுவதன் மூலம் அந்நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியைக் கணிக்க முடியும். ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் பார்க்க் மொத்தத் தேசிய உற்பத்தி கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருக்க முடியும் தேறிய காரணிவருமானம் நேர்க்கணியப் பெறுமானத்தைக் கொண்டிருக்குமாயின், அதாவது வெளிநாட்டிலிருந்துகிடைக்கும் காரணிவருமானத்திலும் பார்க்க வெளி நாட்டிற்கனுப்பப்படும் காரணிவருமானம் குறைவாக இருக்குமாயின் மொத்தத் தேசிய உற்பத்தி மொத்த உள்நாட்டுற்பத்தியிலும் பார்க்கக் கூடுதலாக இருக்கும். மாறாகத் தேறிய காரணிவருமானம் எதிர்க்கணியப் பெறுமானத்தைக் கொண்டிருப்பின், அதாவது வெளிநாட்டிற்கு அனுப்பப்படும் காரணிவருமானம் வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் காரணிவருமானத்திலும் பார்க்கக் கூடுதலாக இருக்குமாயின் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் பார்க்க மொத்தத் தேசிய உற்பத்தி குறைவாக இருக்கும். தேறிய காரணிவருமானத்தின் அளவுலேயே மொத்த உள்நாட்டு உற்பத்தி மொத்தத் தேசிய உற்பத்தி என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டின் அளவு தங்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| மொத்தஉள்நாட்டு உற்பத்தி | 5000/= | 5000/= |
| தேறிய காரணிவருமானம் | 400/= | —400/= |
| மொத்தத் தேசிய உற்பத்தி | 5400/= | 4600/= |

எனவே மொத்த உள்நாட்டு உற்பத்தி மொத்தத் தேசிய உற்பத்தி என்பவற்றைப் பின்வருமாறு சுருக்கமாக வரையறுக்க முடிகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு நாட்டின் எல்லைக்குள்ளே ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் காணப்படுகின்ற உற்பத்திக் காரணிகளினால் (அவை உள்நாட்டுக்குச் சொந்தமானவையாகவோ அல்லது வெளிநாட்டுக்குச் சொந்தமானவையாகவோ இருக்கலாம்.) உற்பத்தி செய்யபபட்ட இறுதிப் பொருட்கள், சேவைகளின் பணரீதியான பெறுமதியாகும் மொத்தத் தேசிய உற்பத்தி என்பது ஒரு நாட்டிற்கு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் கிடைத்த இறுதிப் பொருட்கள் சேவைகளின் உற்பத்தியைக் குறிக்கின்றது எனலாம்.

(தொடரும்)

NOT MERELY A BUSINESS
INFACT A SERVICE!

# K. S. K. BROTHERS

— JEWELLERS —

**86, COLOMBO ST.**

**KANDY.**

Dial: **2548**

*With the Best Compliments of*

## WELCOME HOTEL

**PASALAI,**

**MANNAR.**

*With Best Compliments of*

## Commercial Press & Stores

**30, MAIN STREET,**

**JAFFNA.**

அழகுவர்ணங்கள்! புதுமை டிசைன்கள்!

நாளுக்கு நாள் மாறும் நாகரீக
பிடவை தினிசுகளுக்கு
விஜயம் செய்யுங்கள்

ரஞ்சனஸ்
17, 18, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

தலைமை அலுவலகம்:
க. கந்தையாபிள்ளை & சன்ஸ்
191, மெயின் வீதி,
எட்டியாந்தோட்டை.

VINK VINK VINK VINK

எழுதுவதற்கு உகந்த மை
'விங்க்' மை.

எழுதுவதற்கு உகந்த பேனு
'விங்க்' போல் பொயின்ற் பேனு.

தயாரிப்பாளர்:
வெள்ளியம் பதி,
அளவெட்டி.

ஏகவிநியோகஸ்தர்:
கார்கில்ஸ் (சிலோன்) லிமிட்டட்,
கொழும்பு.

# THE NEW KANDY BAKERY & GREEN CAFE

BAKERS — CONFECTIONERS & CATERERS

UNDER NEW MANAGEMENT :-

Day & Night Meals with Cool & Hot Drinks.

Foreign Liquor, Arrack & Fresh Bottle Toddy.

[ Orders are Undertaken ]

Tele : Phone : 2456
Grams : NEW BAKERY

No. 2, KUMARA VIDIYA
KANDY.

புதிய நிர்வாகத்தின் கீழ் :

## நியூ கண்டி பேக்கரி ச கிறீன் கபே

எந்நேரமும் எவையும் பெற்றுக் கொள்ளலாம்

தொலைபேசி : 2456
தந்தி : நியூ பேக்கரி

இல. 2, குமார வீதி,
கண்டி.

---

- கேக்
- பாண்
- பணிஸ்
- மஸ்கற்
- பிஸ்கற்
- புறியாணி

மற்றும் அறுசுவை உணவு வகைகளும் எந்நேரமும்
பெற்றுக் கொள்ள விஜயம் செய்யுங்கள்

# றகுமானியா ஹோட்டல்

# [RAHUMANIA HOTEL]

இல. 100, கடை வீதி,
வவுனியா.

உரிமையாளர் : M. அப்துல் ஹமிட்

போன் : 314


கொமேஷல் அச்சகம், 30, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

# சந்தா விண்ணப்பப் படிவம்

திரு. / திருமதி / செல்வி ........................................................................ ஆகிய நான் ''அறிவலை'' சஞ்சிகைக்கான சந்தாக்காரராக ரூபா............... சதம்............... செலுத்தி சேர்ந்துகொள்கிறேன் என்பதை தெரியப்படுத்துகின்றேன்.

**என் விலாசம்**

..............................................................................

..............................................................................

.............................................................................. ..............................................................................

கையொப்பம்

---

- இதன் வருட சந்தாத்தொகை ரூபா 10/- ஆகும். பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவர்கள் பிரதிநிதிகளூடாக 8/50 சதத்திற்கு வழங்கப்படும்.
- சந்தா நிர்வாக ஆசிரியரின் பெயருக்கு ஏப்பிரல் 17ம் திகதிக்குப் பின் அனுப்பப் படல் வேண்டும்.